நிறுவனத்தின் பெயர்	:	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்	:	183

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183

அரச கணக்குகள் பற்றிய செயற்குழு

உள்ளடக்கம்

தொடர் இலக்கம்.	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்	பக்க இலக்கம்
1.	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு	1
2.	கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம்	2
3.	சட்ட அலுவல்கள் திணைக்களம்	3
4.	முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்	6
5.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்	8
6.	அரச நிதித் திணைக்களம்	9
7.	திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்	10
8.	தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்	11
9.	பொதுத் தொழில்முயற்சி திணைக்களம்	12
10.	அரச கணக்குகள் திணைக்களம்	16
11.	வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்	17
12.	வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்	18
13.	அரசிறைக் கொள்கைத் திணைக்களம்	19
14.	கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்	20
15.	தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்	23
16.	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்	29
17.	தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்	38
18.	அபிவிருத்தி நிதித் திணைக்களம்	40
19.	தேசிய திட்டமிடல் திணைக்களம்	41

20.	இலங்கை சுங்கம்	42
21.	இலங்கை மதுவரித் திணைக்களம்	47
22.	உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	52
23.	இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்	58
24.	அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களம்	60
25.	சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்	63

திணைக்களத்தின் பெயர் : **நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை சரிபார்க்கவில்லை.	கொவிட்-19 தொற்று நிலைமை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக எரிபொருள் எரிப்பு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வது நடைமுறையில் சாத்தியமற்றதாக இருந்ததுடன், எரிபொருள் பிரச்சினை பெருமளவிற்கு தீர்க்கப்பட்டுள்ளதால், 2023 ஆம் ஆண்டிலிருந்து இந்த விடயத்தை ஆராய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வரும் கடன் நிலுவைகள் காணப்பட்டன	கடன் நிலுவைகளில் சிலவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில் ஏனைய கடன் நிலுவைகள் அறவிடப்பட்டுவருகின்றன.
ஒட்டுமொத்தப் பதவியணிக்கும் உரியதாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்திருக்கவில்லை.	அந்த சந்தர்ப்பத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட அதேவேளையில், தற்போது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தப் பதவியணிக்கும்செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
மேலதிக பணிப்பாளர் நாயகம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

திணைக்களத்தின் பெயர் : **கொப்றோலர் நாயகத்தின் அலுவலகம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	**நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை**
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தது.	கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, 2020 ஆம் ஆண்டு எதிர்பார்த்த பயிற்சித் திட்டங்களை நடத்த முடியவில்லை. 2021 ஆம் ஆண்டில், 2021.08.28 ஆந் திகதிய MF/NB/07/CM/2021/163 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி, கொம்ப் றோளர் ஜெனரல் அலுவலகத்தின் செலவுகள் குறைக்கப்பட்டதுடன், அதன்படி பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2022 ஆம் ஆண்டில், திட்டமிட்டபடி பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
கொம்ட்ரோலர் ஜெனரல்
கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம்

திணைக்களத்தின் பெயர் : சட்ட அலுவல்கள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளை கூட்டிணைப்பதப்பதற்காக நியமிக்கப்பட வேண்டிய இரண்டு பிரதிநிதிகள் பற்றிய விபரம் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை	தாமதப் பிழையின் காரணமாக தொடர்புடைய விடயங்கள் அனுப்பப்பட்டிருக்கவில்லை. அதனை துரிதமாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
பிரசைகள்/ சேவைபெறுநர் சாசனம் உரிய விதத்தில் தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவில்லை. நிறுவனத்தின் பிரசைகள்/ சேவைபெறுநர் சாசனம் நடைமுறைப் படுத்தப்படுவது குறித்து கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனத்தினால் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	சட்ட அலுவல்கள் திணைக்களத்தினால் வரவு செலவு செயல்முறை உட்பட நிதி முகாமைத்துவம் தொடர்பான பல்வேறு சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் வரைவுகளை தயாரித்தல் மற்றும் நிதி ஒப்பந்தங்களை தயாரித்தல் அதேபோன்று நிதி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களங்கள் தொடர்பான வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு ஒப்பந்தங்கள் தொடர்பான சட்ட விவகாரங்கள் போன்றவை தொடர்பில் சட்ட வரைஞர் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுகின்ற அதே வேளையில், பொது மக்களுடன் நேரடியாக தொடர்பு கொள்வதில்லை. எனவே, நடைமுறையில் பிரசைகள்/ சேவைபெறுநர் சாசனத்தைத் தயாரிக்க வேண்டிய அவசியமில்லை என்பது அவதானிக்கப்படுகிறது.
பொது நிர்வாக ஏற்பாடுகளுக்கு அமைவாக முறையாக தயாரிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவில்லை. தயாரிக்கப்பட்ட	இந்தத் திணைக்களம் மிகக் குறைந்த பணியாளர்களைக் கொண்டு இயங்குகின்ற அதே வேளையில் அப்போது மனிதவள அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்

மனிதவளத் திட்டத்தில் ஒரு பணியாளருக்கு ஆண்டுக்கு 12 மணிநேரம் குறைந்தபட்ச பயிற்சி அளிக்கப்படவில்லை.	படவில்லை, ஆனால் அதிகாரிகளுக்குத் தேவையான பயிற்சி வாய்ப்புகளை வழங்குமாறு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்வாறு பெறப்பட்ட கோரிக்கைகளின்படி, தேவையான பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு பரிந்துரைகள் செய்யப் பட்டுள்ளன. தற்போது, 2023 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கு அமைவாக, மேலும் விரிவான பயிற்சி வாய்ப்புகளை வழங்கும் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு என எதிர்பார்க்கப்படுகிறது
முழு ஊழியர்களையும் உள்ளடக்கியதாக செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட வில்லை.	2023 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்டது.
மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் கொள்ளளவு மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் நடைமுறை படுத்துவதற்கு நிறுவனத்தில் சிரேட்ட உத்தியோகத்தர் யாரும் நியமிக்கப்படவில்லை.	தற்போது, சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர் பெயரிடப்பட்டு, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளார். (2023.04.03 திகதி)
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாகவே இருந்தது.	2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் காரணமாக பயிற்சி வாய்ப்புகளை வழங்குவது மட்டுப்படுத்தப் பட்டது. ஆனால் 2023 ஆம் ஆண்டிற்கான, உள்நாட்டு பயிற்சிக்காக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு இல்லாவிட்டாலும், வரவு செலவு செய்யப்படாத பயிற்சி வாய்ப்புகள் அதிகபட்சமாக வழங்கப்பட உள்ளது.
வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின்படி, குறைந்தபட்சம் நிறைவுக்கான மூன்று குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு ஆவணப்படுத்தப்படவில்லை	இது குறித்து ஆய்வு நடத்தப்பட்டு விரைவில் அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
நிறுவனங்கள் ஆற்றிய பங்கு தொடர்பான 03	நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக,

முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் காணப்பட்ட முதல் செயலாற்றுகை குறிகாட்டியின் அடைவு 50% க்கும் குறைவாக இருந்தது. அடையாளம் காணப்பட்ட இரண்டாவது செயலாற்றுகை குறிகாட்டியின் அடைவு 50% க்கும் குறைவாக இருந்தது. மூன்றாவது செயலாற்றுகை குறிகாட்டியின் அடைவு 50% க்கும் குறைவாக இருந்தது.	பாராளுமன்றத்தில் புதிய சட்டங்களை தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செயலாற்றுகை குறிகாட்டிகளின் அடைவு மட்டம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகிறது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
மேலதிக பணிப்பாளர் நாயகம்
சட்ட அலுவல்கள் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய MSDW/08/64 எனும் இலக்கத்தை கொண்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைவாக நிறைவேற்ற வேண்டிய நிலைபேரான அபிவிருத்தி நடவடிக்கைகளை கூட்டிணைப்பதற்காக நியமிக்க வேண்டிய பிரதிநிதிகள் இருவர் பற்றிய விபரம் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களின் இலக்கம் DMA/ADM/APR/2020 மற்றும் 2021.11.03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நிலைபேரான அபிவிருத்தி நடவடிக்கைகளை கூட்டிணைப்பதற்காக கீழே பெயர் குறிப்படப்பட்டுள்ள அலுவலர்கள் இருவர் நியமிக்கப்பட்டு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ❖ பணிப்பாளர் - திரு.பி.ஜி.திசார ❖ பணிப்பாளர் – திருமதி.எச்.எம்.பீ.எச்.குமாரிஹாமி
திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகளில் வழங்கப்பட்ட பயிற்சி நெறிகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தது.	2021 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வு செயல்முறையை சீர்படுத்தும் வகையில், மாகாண உள்ளக கணக்காய்வு பணிப்பாளர்களுக்கும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் பயிற்சி நெறிகள் நடத்துவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ளது. கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக ,2021 ஆம் ஆண்டு முழுவதும், நாடு மூடப்பட்டுள்ளது, பிராந்திய ரீதியாக மூடப்பட்டது மற்றும் தனிப்பட்ட கூட்டங்கள் போன்றவற்றை நிறுத்துவதற்கான உத்தரவு காரணமாக, பயிற்சி நெறிகள் எதிர்பார்த்தபடி நடத்த முடியவில்லை. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பயிற்சி நெறிகள் ஏற்பாடு செய்யும் போது, அந்த மாகாண சபைகளுக்குச் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அந்த மாகாண சபைக்கு அழைத்து பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

	எவ்வாறாயினும், இந்தப் பயிற்சிப் நெறிகளை ஒழுங்கமைத்து நடத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் நடைமுறைச் சிக்கல்களைப் போக்க மாற்று முறையாக ZOOM தொழில்நுட்பத்தின் மூலம் பயிற்சிப் நெறிகளை 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் நடத்தத் தொடங்கியது. அதன்படி, 2021 ஆம் ஆண்டிற்கான 10 பயிற்சி நெறிகளை இத்திணைக்களம் நடத்தியதுடன், அதில் 4 நெறிகளில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி உள்ளக கணக்காய்வாளர்கள் கலந்துகொண்டனர். அவையாவன - 1. புதிய உள்ளக கணக்காய்வாளர்களுக்கான பயிற்சி நெறிகள் (23.02.2021) 2. கொள்வனவு தொடர்பான பயிற்சி நெறிகள் (2021.10.21/25) 3. புதிய உள்ளக கணக்காய்வாளர்களுக்கான பயிற்சி நெறிகள் (2021.11.03/05) 4. இடர் அடிப்படையிலான உள்ளக கணக்காய்வு திட்டத்தைத் பயிற்சி நெறிகள் (2021.11.16) அதன் மூலம், 2021 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை இருந்தபோதிலும், ஒரு குறிப்பிட்ட அளவு எதிர்பார்த்த மட்டத்தை அடையமுடிந்தது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
2018/04/27 திகதிய MSDW/08/65 இலக்கமுடைய சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பிற்காக நியமிக்கப்பட்ட இரு பிரதிநிதிகளின் விபரங்கள் அமைச்சகத்திற்கு அறிவிக்கப்படாமை	MSDW/08/65 இலக்கமுடைய சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பிற்காக ஏற்கனவே இரு அதிகாரிகள் பெயரிடப்பட்டு DMS/AO/Sus.Dev. என்ற இலக்கமுடைய 2022.02.15 திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சகத்திற்கு அறிவிக்கப்பட்டது

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **அரச நிதித் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	**நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை**
குறைபாடுகள் எதுவம் இல்லை	தொடர்புடையதல்ல

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக அரச நிதித் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
அரச நிதித் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	**நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை**
குறைபாடுகள் எதுவம் இல்லை	தொடர்புடையதல்ல

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
வருடாந்த பொருள் சுற்றாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகை பற்றாக்குறை பற்றிய பரிந்துரைகளும் ஏனைய பரிந்துரைகளும் உரிய கால எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மிக மற்றும் பற்றாக்குறை பொருள் சுற்றாய்வு பரிந்துரைகளுக்கு அமைவாக புத்தகங்களில் சீராக்கும் செய்யப்பட்டுள்ளது.
2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் விரயம் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்திற்கு ஒதுக்க வாகனங்கள் இல்லை. பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனம் மாத்திரமே இருக்கின்றது. அந்த வாகனத்திற்கான எரிபொருள் விரயம் பற்றிய பரிசீலனையை மேற்கொள்வதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.
ஒட்டுமொத்த பதவியினரையும் உள்ளடக்கியதாக செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	செயலாற்றுகை ஒப்பந்தத்தை தயாரிப்பதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **பொது முயற்சியாண்மை திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
ஓராண்டுக்கு மேலாக காணப்படும் நிலுவைக்கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை	ஒரு வருடத்திற்கும் மேலான இரண்டு கடன் நிலுவைகள் உள்ளன. 1.1. திரு. எஸ்.எல்.சோமச்சந்திர, அலுவலக உதவியாளர் இடைநிறுத்தப்பட்டுள்ள திரு.எஸ்.எல். சோமச்சந்திரவின் கடன் மிகுதி ரூபா:332,459.00. இது பின்வரும் கடன்களைக் கொண்டுள்ளது. துவிச்சக்கர வண்டி கடன் ரூ: 5,232.00 சொத்துக் கடன் ரூ: 185,621.00 பேரிடர் கடன் ரூ: 140,106.00 விழா முன்பணம் ரூ: 1,500.00 **ரூ: 332,459.00** 1.2. திரு.W.M.அமரசேன - அலுவலக பணி உதவியாளர் இத்திணைக்களத்தில் 25.02.2020 முதல் பணியாற்றிய அலுவலகப் பணி உதவியாளர் திரு. டபிள்யூ.எம்.அமரசேன அவர்கள் பொதுத் திறமையின்மையின் அடிப்படையில் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுமதியளித்துள்ளார். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பேரிடர் கடன் தொகை மற்றும் விழா முன்பணம் மீதியை வசூலிக்க 29.07.2022 அன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும். 12.06.2023 அன்று துவிச்சக்கர வண்டி கடன் மற்றும் சொத்துக் கடன் தொடர்பான ஆவணங்கள் கடுவெல நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதியான ரூபா 216,900.00 இவரின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து மீளப் பெறுவதற்கான

	ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தகவலறிதல் சட்டத்திற்கிணங்க தமது நிறுவனத்தில் தகவல்களை வழங்குவதற்காக கிறித்துரைத்த அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை .	பொது முயற்சிகள் திணைக்களத்தின் தகவல் அதிகாரியாக பணிப்பாளர் ஆர்.ஜே.ஆப்தீன் நியமிக்கப்பட்டுள்ளார்.
.நிறுவனம் பற்றி பொது மக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்காக இணையத்தளமொன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை	பொது முயற்சிகள் திணைக்களத்தின் கீழ் நிதி அமைச்சின் இணையத்தளத்தில் (https://www.treasury.gov.lk/) பொதுமக்கள் எமது திணைக்களத்தின் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். பொது நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை பொது நிறுவனங்கள் துறையின் முகாமைத்துவ தகவல் அமைப்பில் (PED-MIS) பெறலாம்.
.நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை	பொது முயற்சிகள் திணைக்களம் இதுவரை 03 நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடையாளம் கண்டுள்ளது. **<u>குறிக்கோள் 01</u>** உற்பத்தித்திறன் நடவடிக்கைகளுக்கு ஏற்ப தொழில்முனைவு மற்றும் படைப்பாற்றலை ஆதரிக்கும் வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை ஊக்குவிக்கவும். நிதிச் சேவைகளுக்கான உதவிகளை வழங்குவதன் மூலம் நுண் , சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை ஊக்குவித்தல் (SDG.8.3) **<u>குறிக்கோள் 02</u>** அனைத்து நிறுவனங்களும் நிலையான மேம்பாட்டைப் பின்பற்றவும், அவர்களின் அறிக்கையிடல் செயல்பாட்டில் நிலைத்தன்மை தகவலை ஒருங்கிணைக்கவும் ஊக்குவிக்கவும் (SDG.12.5) **<u>குறிக்கோள் 03</u>** தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப நிலையான பொது கொள்முதல் நடைமுறைகளை ஊக்குவித்தல் (SDG.12.7)
இனங்கண்ட நிலைபேறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைத்தலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை	**<u>குறிக்கோள் 01 தொடர்பான இலக்குகள்</u>** வணிக முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் (41) அமைச்சரவை குறிப்புகள் (111) மீதான அவதானிப்புகள் மற்றும் கருத்துகளை வழங்குதல் உயர், நடுத்தர, குறைந்த நிலை (165) என முன்னுரிமை நிலை கண்காணிப்பின்படி அரசு

	வணிகத்தை சரியான நேரத்தில் கண்காணித்தல் பொது நிறுவனங்களில் சிக்கல்களைக் கையாளுதல்/தீர்த்தல் (2750) அரசாங்க வணிகங்களுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் (05) <u>குறிக்கோள் 02க்கான தொடர்புடைய இலக்குகள்</u> பொது நிறுவனங்களின் செயல்திறனைக் கண்காணித்தல் (151) தரவு அமைப்பு மூலம் அரசாங்க வணிகத்தை கண்காணித்தல் (101) <u>குறிக்கோள் 03க்கான தொடர்புடைய இலக்குகள்</u> பொது வணிகப் பிரச்சினைகளில் பயனுள்ள தணிக்கை மேற்பார்வைக்காக கணக்காய்வாளர் நாயகம் , வெளிப்புற கணக்காய்வாளர் எடுத்த நடவடிக்கைகளை எளிதாக்குதல் (68) பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்றக் குழுவிற்கு உதவுதல் (27) பொது அலுவல் தொடர்பான நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வது (31) குறிப்பிட்ட காலத்திற்குள் (140) வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் தொடர்பான பின்தொடர்தல்
நிறுவனத்தின் நிலைபேறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலுடன் ஏற்புடைய குறித்துரைத்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை	நிலையான வளர்ச்சி இலக்குகளை கொண்டு வருவதற்கு பொருத்தமான பின்வரும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன 1. மேலதிக பணிப்பாளர் நாயகம் , விவசாயம் 2. மேலதிக பணிப்பாளர் நாயகம், கொள்கை 3. மேலதிக பணிப்பாளர் நாயகம், சேவைகள் 4. மேலதிக பணிப்பாளர் நாயகம், கைத்தொழில்
நிலைபெருதகு அபிவிருத்தியினை இணைப்பாக்கம் செய்வதற்காக நியமிக்கப்படவேண்டிய இரண்டு பிரதிநிதிகள் பற்றிய விபரங்கள் அமைச்சுக்கு அறிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.	நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான பணிகள் தொடர்பான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளின் இணைப்பாளர்களாக செயல்படுவார்கள். 1. பீ.ஏ.டீ.ரோட்ரிகோ மேலதிக பணிப்பாளர் நாயகம் 2. ஆர்.ஜே.ஆப்தீன் பணிப்பாளர்
பிரசைகள் /சேவைபெறுநர் சமவாயம் முறைப்படித் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படவில்லை.	எதிர்காலத்தில் பிரசைகள் /சேவைபெறுநர் சமவாயம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது
நிறுவனத்தின் பிரசைகள் /சேவைபெறுநர் சமவாயம் அமுலாக்கப்படுவது பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு	எதிர்காலத்தில் பிரசைகள் /சேவைபெறுநர் சமவாயம் பயன்பாடுகளை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் இந்த முறை

செய்வதற்குமான முறையியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	உருவாக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக பொதுத் தொழில்முயற்சி திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
பொது முயற்சியாண்மை திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : அரச கணக்குகள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
ஒரு வருட காலத்திற்கும் அதிகமாக நிலுவை கடன் மீதிகள் காணப்பட்டமை.	கடன் நிலுவை தீர்க்கப்பட்டது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக அரச கணக்குகள் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
அரச கணக்குகள் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
திணைக்கள பொது வாகனங்களின் தினசரி இயங்கும் அட்டவணை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் கணக்காளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை	அவதானங்களுடன் உடன்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிலிருந்து தினசரி இயங்கும் அட்டவணை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் கணக்காளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2016.12.29 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2016/03 இன் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் படி நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான சோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை.	அவதானங்களுடன் உடன்பட்டுள்ளது. இந்த திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான சோதனைகள் 2021ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் எரிபொருள் பாவனை தொடர்பான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்திலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
நிதி ஒழுங்குவிதி 94 (1) இன் அடிப்படையில் செலவீனத் தலைப்புக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தியதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொறுப்புக்கள் எஞ்சிய ஒதுக்கீட்டின் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளைவிட அதிகமாக செய்யப்பட்டன.	அவதானங்களுடன் உடன்படவில்லை. 40,103 ரூபாய் மற்றும் 4,250 ரூபாய் ஆனது 2021ஆம் ஆண்டில் முறையே 1002 மற்றும் 1011 செலவுத் தலைப்பின் கீழ் ஏற்பட்டது. 2020 ஆம் ஆண்டில் ஓட்டுனர்கள் செய்த கூடுதல் நேரம் மற்றும் பயணச் செலவுகள் தொடர்பாக, மேற்கூறப்பட்ட செலவீனங்கள், நிதி ஒழுங்குவிதி 94(2) இன் படி "வருடாந்திர தொடர்ச்சியான சேவை அல்லது வழங்கல்களின் 2021ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பது தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் குறைந்தபட்சம் 2 தடவையாவது நடாத்தப்பட்டிருக்கவில்லை. 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் விரயம் பற்றிய பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை.	2020 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 2 நடாத்தப்பட்டுள்ளன. கோவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைப்பதனை வரையறுத்தமை, அத்தியாவசிய சேவைகளுக்கான அழைப்புகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் எரிபொருள் விரையம் பற்றிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் இருக்கவில்லை.
தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டத்தின் மூலம் ஓர் ஊழியருக்கு குறைந்தபட்சம் வருடத்திற்கு 12 மணித்தியால குறைந்தபட்ச பயிற்சி விதிக்கப்பட்டிருக்கவில்லை.	கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பயிற்சிக்காக உத்தியோகத்தர்களை அழைப்பதை, ஒன்றுதிரட்டுவதை வரையறுக்க வேண்டி ஏற்பட்டிருந்தபடியினால் பயிற்சி வாய்ப்பு களுக்காக உத்தியோகத்தர்களை பங்குபெற்ற செய்ய முடியவில்லை.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
29.12.2016 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அமைச்சு/ திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீள்சோதனை செய்யப்படவில்லை.	29.12.2016 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்படி திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வுச் சோதனையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட உபரிகள், குறை பாடுகள் தொடர்புபட்ட பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயல்படுத்தப்படவில்லை.	வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் உபரி அல்லது பற்றாக்குறை எதுவும் இல்லை. 2020 பொருட் கணக்கெடுப்பு குழுவினால் ஒதுக்கப்பட வேண்டியவை என பரிந்தரைக்கப்பட்ட பொருட்கள் ஏலமிடப் படுவதற்காக விலைக்குழு 18.08.2021 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. விலைக்குழுவின் சிபாரிசு 06.10.2021 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. அப்பொருட்கள் நி.பி 747 இன் கீழ் விற்பனை செய்வதற்காக அமைச்சின் செயலாளரின் அனுமதிக்காக 14.10.2021 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் 27.10.2021 ஆம் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. 23.11.2021 ஆம் திகதி அப் பொருட்கள் ஏலத்தில் விற்கப்பட்டு ரூபா 27,140/= வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2020 பொருட் கணக்கெடுப்பு குழு சிபாரிசின் படி, கீழ் தள நவீனமயமாக்கலின் போது கழற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்ட பழைய பொருட்களை விற்பனை செய்வதற்காக 14.10.2021 ஆம் திகதி தொழிநுட்ப குழு நியமிக்கப்பட்டது. 18.10.2021 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் ஏலம் அழைக்கப்பட்டது. கொள்முதல் குழுவின் தீர்மானத்தின் படி கூடிய ஏலத்தினை முன்வைத்த திரு. எஸ்.எம்.அனில் பாலித என்பவருக்கு ரூபா. 391,786/= எனும் தொகைக்கு 16.11.2021 ஆம் திகதி விற்பனை செய்ததன் பின்னர் அப்பணம் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பொருட் கணக்கெடுப்பு குழுவின் விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்பட்ட கடன் நிலுவைகள் இருந்தன.	இத்திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற மூன்று அலுவலர்களிடமிருந்து

	பெறப்பட வேண்டிய ரூபா.120,741/- எனும் தொகையானது, அரசாங்க கணக்கு திணைக்களத்தின் அறிவுரையின் படி கணக்கு சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. சேவையிலிருந்து விலகிச்சென்ற அலுவலர் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.
இருப்பு வாகனங்களுக்கான தினசரி இயங்கும் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட கோவிட் 19 தொற்று காரணமாகவும் இத் திணைக்களத்தில் போதிய சாரதிகள் இல்லாமை மற்றும் அனைத்து சாரதிகளும் மேல் மாகாணத்திற்கு வெளியில் வசிப்பவர்கள் என்பதாலும், அவர்களை முறையாக சேவைக்கு அழைப்பதில் ஏற்பட்ட சிக்கலினாலும் ஓட்டுநர் பதிவேடுகளையும் மாதாந்த சுருக்க அறிக்கையினையும் முறையாக பராமரிக்க முடியவில்லை. எனினும், தற்போது இதுதொடர்பில் சாரதிகளுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு, ஓட்டுநர் பதிவுகள் மற்றும் மாதாந்த சுருக்கங்களை முறையாகப் பராமரிக்க ஏற்பாடு செய்துள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு முதல், கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கைகளை அனுப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டிற்கான செயல்திறன் அறிக்கைகளை உரிய தினத்திற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமை.	2020 ஆம் ஆண்டில், கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக அலுவலர்கள் பணிக்கு வர இயலாமையால் 2020 ஆம் ஆண்டின் செயல்திறன் அறிக்கையை உரிய தினத்திற்குள் சமர்ப்பிக்க முடியவில்லை, எனினும் அவ் அறிக்கை 28.06.2022 ஆம் திகதியன்று பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அடுத்த ஆண்டிற்கான அதாவது 2021 ஆம் ஆண்டின் செயல்திறன் அறிக்கை, திட்டமிடப்பட்ட தேதிக்கு முன்னதாக அதாவது 28.06.2022 அன்று பாராளுமன்றத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.
ஏப்ரல் 27, 2018 திகதியிட்ட MSDW/08/65 சுற்றறிக்கையின் விதிகளின்படி மேற் கொள்ளப்பட வேண்டிய நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒருங் கிணைப்பிற்காக நியமிக்கப்படவுள்ள இரண்டு பிரதிநிதிகள் பற்றிய விவரங்களை அமைச்சுக்கு தெரிவிக்கவில்லை.	இந்த இரண்டு பிரதிநிதிகளும் 03.02.2022 ஆம் திகதியிட்ட கடிதத்தில் அப்போதைய இத்திணைக்களத்திற்குப் பொறுப்பான நிதி அமைச்சிற்கு அறிக்கையிடப் பட்டுள்ளது.
நிறுவனத்தின் குடிமக்கள் / சேவை பயனாளிகளின் சாசனம் செயல்படுத்தப் படுவதைக் கண்காணிக்கவும் மதிப்பீடு	தினமும் திணைக்களத்தில் அலுவலர்கள் பெறும் விண்ணப்பங்களில், ஒரு அலுவலர் குறைந்தபட்சம் 30 விண்ணப்பங்களுக்கு

செய்யவும் நிறுவனம் ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கவும், அதே போல் இந்த அலுவலர்கள் உரிய காலத்தில் ஆற்றிய பணிகளை மதிப்பாய்வு செய்யவும் உத்தர விடப்பட்டுள்ளது. திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் வருடாந்த செயற்திறன் அறிக்கைகள் தற்போது இதன் கீழ் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.
அரசாங்க நிர்வாக விதிமுறைகளின்படி முறையாகத் தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தைத் தயாரிக்கத் தவறியது.	எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.
தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தில் ஒரு ஊழியருக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணிநேரம் பயிற்சி அளிக்கப்படவில்லை.	2020 ஆம் ஆண்டில் கோவிட் தொற்றுநோய் காரணமாக, குழுக்களாக சேர்வதற்கு சுகாதாரத் துறையால் அனுமதிக்கப்படவில்லை என்றாலும், நிறுவன அலுவலர்களுக்கு பயிற்சி வாய்ப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயல்திறன் ஒப்பந்தங்களை தயார் செய்து ஒப்பந்தம் செய்யாதது.	எதிர்காலத்தில் ஒப்பந்தங்கள் தயார்செய்து நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பிடப் பட்டுள்ளது.
மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் திறன் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்கும் எந்த ஒரு சிரேட்ட அதிகாரியையும் நிறுவனம் பரிந்துரைக் கவில்லை.	எதிர்காலத்தில் இது தொடப்பாக அலுவலர்களை நியமிப்பதற்கு குறிப்பிடப் பட்டுள்ளது.
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாகவே இருந்தது.	2020 ஆம் ஆண்டில் கோவிட் தொற்றுநோய் காரணமாக, பயிற்சி அமர்வுகள் குழுக்களாக நடத்தப்படவில்லை எனினும், 2021 ஆம் ஆண்டில், நிறுவனம் 58 அலுவலர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்கியதுடன் இது மொத்த ஊழியர்களில் கிட்டத்தட்ட அரைவாசியாகும்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக கம்பெனி பதிவாளர் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
கம்பனி பதிவாளர் நாயகம்
கம்பனி பதிவாளர் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
பாவனைக்கு பொருத்தமற்றது என வெளிப்படுத்தப்பட்டிருந்த ஒரு வாகனம் 6 மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் அகற்றப்பட்டிருக்காமை.	வாகனங்களை அப்புறப்படுத்த நியமிக்கப்பட்ட குழுவில் இயந்திரப் பொறியியலாளர் ஒருவர் இல்லாததால், இயந்திரப் பெறியியலாளர் ஒருவர் அடங்கிய புதிய குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு அறிக்கையுடன், வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அனுமதி கோரி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு வாகனத்திற்கும் இற்றைப்படுத்தப்பட்ட அடிப்படையில் பதிவு புத்தகங்களை பேணத் தவறியமை	தொடர்புடைய பதிவு புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றன
2016.12.29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை பத்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு குறித்து சரிபார்க்கத் தவறியமை.	நாட்டில் நிலவிய உலகளாவிய கோவிட் தொற்றுநோய் காரணமாகவும், எரிபொருளைப் பெறுவதற்கான QR வசதி அறிமுகப்படுத்தப்பட்டதாலும், எரிபொருளை பெற்றுக்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டது. எனவே, எரிபொருள் நுகர்வு சோதனை செய்ய முடியவில்லை. எனினும் தற்போது மாவட்ட அலுவலகங்களில் எரிபொருள் நுகர்வு சோதனை செய்யப்பட்டு, அதற்கான அறிக்கை தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படுவதுடன், தலைமை அலுவலகத்தில் எரிபொருள் நுகர்வை சரிபார்க்க குழு நியமிக்கப்பட்டுள்ளது.
வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட சரி செய்ய வேண்டிய நிலுவைகள் தொடர்பில் நிதி	2020 டிசம்பர் 31அன்று உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், பணம் செலுத்துவதற்காக வங்கிக்கு வழங்கப்படாத

ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படவில்லை	காசோலைகளில், ரூ. 7,700.00க்கான காசோலை தவிர அனைத்து காசோலைகளும் தீர்வாகியுள்ளன. மேலும் இந்த ரூ. 7,700.00 பெறுமதியான காசோலையும் 2020 ஆம் ஆண்டில் செல்லுபடியாகும் காலம் நீட்டிக்கப்பட்டிருந்த போதும் பணம் அனுப்புவதற்கு வங்கிக்கு வழங்கப்படவில்லை என்பதால் பணம் செலுத்துவது இடைநிறுத்தப்பட்டு அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளின் கால பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்காமை	2020.12.31 அன்று உள்ளவாறு நிலுவையில் உள்ள கடன் நிலுவைகள் குறித்த கால பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டு, அந்த ஆண்டிற்கான அரச உத்தியோகத்தர்களின் முற்பண B கணக்கை கணக்கிணக்க கூற்றுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்து வரும் கடன் நிலுவைகளின் இருப்பு	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம் - இணைப்பு 01
பிரஜை/வாடிக்கையாளர் சாசனம் சரியாக தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை	2020 ஆம் ஆண்டில், திணைக்களத்திற்கு ஒரு சாசனம் இருக்கவில்லை என்பதுடன், இந்த பணியை மேற்கொள்வதற்கு பொருத்தமான அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்க வேண்டும் என்று பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டது. திணைக்களத்திற்கான பிரஜை/வாடிக்கையாளர் சாசனத்தைத் தயாரிப்பதற்காக 202206.16 ஆந் திகதிய DCS/ADG(Admin)/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன், அந்தக் குழு பிரஜை/வாடிக்கையாளர் சாசனத்தைத் தயாரித்துள்ளது.
நிறுவனத்தில் ஒரு பிரஜை/வாடிக்கையாளர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான ஒரு முறைமையை நிறுவனம் உருவாக்காமை.	
பொது நிர்வாக ஒழுங்குவிதிகளின்படி ஒரு மனித வளத் திட்டம் முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	இத்திணைக்களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் மனித வள அபிவிருத்தித் திட்டத்தை எமது திணைக்களம் முதலில் 2017 ஆம் ஆண்டில் தயாரித்தது, இது 2018.01.24 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் ஆகும். பொது நிர்வாகச் சுற்றறிக்கை 2/2018 இன் பத்தி 5

	இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்தத் திட்டம் எங்கள் நிறுவனத்துக்கே உரித்தான முறையைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டதால், சுற்றறிக்கையின் இணைப்பு 2ன்படி மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், பொது நிர்வாக சுற்றறிக்கை 2/2018 இன் பத்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, எதிர்காலத்தில் மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன்.
தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தில் ஒரு ஊழியருக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணிநேரம் பயிற்சி குறிப்பிடப்பட்டிருக்காமை திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் 50% க்கும் குறைவாக இருந்தமை	2020 ஆம் ஆண்டுக்கான துறைசார் பயிற்சித் திட்டத்தின்படி, திணைக்களத்தில் பணிபுரியும் அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கட்டாய பயிற்சி வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2020 நிதியாண்டில் நாட்டில் ஏற்பட்ட கடுமையான கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, சம்பந்தப்பட்ட ஆண்டில் திட்டமிடப்பட்ட பல திட்டங்களை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியவில்லை. அரச நிறுவனங்களின் பணிகளை இணைய வழி ஊடாக மேற்கொள்ளுமாறு அரசாங்கம் பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஊடாக அறிவித்திருந்த போதிலும், அன்றைய நாட்டில் நிலவிய நிலைமையை கருத்திற் கொண்டு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பயிற்சித் திட்டங்களை முறையான முறைகளின்படி செயற்படுத்த தேவையான ஒழுங்குகள் தயாரிக்கப்படவில்லை. மேலும், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் ஒரு தொழில்நுட்பம் சார்ந்த திணைக்களம் என்பதால், நிகழ்நிலை ஊடாக தொழில்நுட்ப விடயங்களைப் பற்றி தெரிவிப்பது பயனுடையதன்று. இந்த விடயங்களின் காரணமாக, தயாரிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின்படி ஒரு ஊழியருக்கு ஆண்டுக்கு 12 மணிநேரம் குறைந்தபட்ச பயிற்சி வாய்ப்பை வழங்க முடியவில்லை.

மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் திறன் விருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒரு சிரேஷ்ட அதிகாரி நிறுவனத்தில் நியமிக்கப்பட்டிருக்காமை.	கடமை ரீதியாக சிரேஷ்ட அதிகாரிகள் எழுத்துமூலமாக நியமிக்கப்படாத போதும், பயிற்சிப் பிரிவு பணிப்பாளரின் கீழ், மனிதவள அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து, திறன் விருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டிருந்தது.
அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்காமை	அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை ஒப்பந்தங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

இணைப்பு 01

2020 ஆம் ஆண்டிற்கான கடன் நிலுவைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம்

	உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி	கடன் வகை	மீதி	விபரம்
பதவி வெறிதான உத்தியோகத்தர்கள்				
1	ஜீ.என். பெரேரா (புள்ளிவிபரவியலாளர்)	இடர்	ரூ. 23,320.00	கடன் தொகையை பதிவழிப்பு செய்வதற்கான அமைச்சின் அங்கீகாரம் MFI/02/25/DCS/EST-57 2023.02.09 ஆந் திகதி கிடைக்கப்பெற்றதுடன், குறித்த செலவு விடயம் 2023 மதிப்பீட்டில் இல்லாததால், அந்த செலவு விடயத்துக்கான ரூ. 23,320/= தொகைக்கான மேலதிக ஒதுக்கீட்டைப் பெற தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
2	எம்.ஏ.டீ.ஜீ. பெரேரா (அலுவலக உதவியாளர் சேவை.)	இடர்	ரூ. 27,305.00	2022 டிசம்பர் மாதம் கடன் மீதி பதிவழிப்புசெய்யப்பட்டது.
3	ஈ.பீ. ரேமண்ட் சில்வா (எழுதுனர்)	இடர்	ரூ. 17,500.00	2021 ஒக்டோபர் மாதம் தீர்க்கப்பட்டுள்ளது.
4	ஆர்.பீ.எல். சுஸந்த (அலுவலக உதவியாளர் சேவை.)	இடர்	ரூ. 17,050.00	ரூ.16,650.00 கடன் மீதியில் ரூ.400.00 செலுத்தப்பட்டது. மீதமுள்ள தொகையையும் செலுத்துமாறு கடனாளிக்கு அல்வப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.
5	டபிள்யு.எம்.ஜே.கே. வீரகோன் (புள்ளிவிபர உத்தியோகத்தர்)	விழா -3,800/= இடர் - 23,280/=	ரூ. 27,080.00	2022.09.29 ஆந் திகதி குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்திடம் இருந்து வரப்பெற்ற திணைக்களம் மேற்கொண்ட விசாரணைக்கு பதிலளிக்கும் வகையில், மேற்படி திணைக்களம் 16.11.2022 ஆந் திகதி DIE/IT/19/01 ஆம் இலக்க கடிதத்தை எமக்கு அனுப்பியுள்ளது. இதன்படி இந்த உத்தியோகத்தருக்கு 09.12.2021 அன்று தேசிய அடையாள அட்டை இலக்கம் 711072276V க்கான N 9199687 இலக்கம் கொண்ட கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையை செலுத்துவது தொடர்பாக பிணைதாரருக்கு நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.
6	ஏ.ஜீ.எம்.எஸ்.குமார (புள்ளிவிபர உத்தியோகத்தர்)	விழா -600/= இடர் - 37,810/=	ரூ. 38,410.00	சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இல. C/36/2020 (Sk) மற்றும் 27.10.2022 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உத்தியோகத்தரின் சரியான முகவரியைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால். கோப்பை மூட வேண்டியிருக்கும் என்று எமது திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
7	டபிள்யு. வீ. ஏ.ஜே.எஸ் குமார (குறியீட்டு எழுதுனர்)	இடர்	ரூ. 47,150.00	சட்ட மாஅதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.
8	கே. எம்.டி.ஆர். பிரியதர்ஷனி பெரேரா (குறியீட்டு எழுதுனர்)	இடர்	ரூ. 78,200.00	சட்ட மாஅதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.
9	டி.எச். சரத் (அலுவலக உதவியாளர் சேவை.)	இடர்	ரூ. 18,018.00	2022 நவம்பரில் முழுமையாக செலுத்தி முடிக்கப்பட்டது.

10	எம்.ஜீ.டி.கே. பிரியகெலும் (அலுவலக உதவியாளர் சேவை)	இடர்	ரூ.104,250.00	இல. HR10/கொ.செ.செ./192/2 மற்றும் 16.03.2023 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்த கடன் தொகையை மீட்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்களை வழங்குமாறு கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
11	எம்.பி.ஆர்.ஜே. பண்டார (புள்ளிவிபர உதவியாளர்)	விழா - 5000/= இடர் - 90,140/=	ரூ. 95,140.00	சட்ட மாஅதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.
12	எம்.எஸ்.எம். சப்ராஸ் (அலுவலக உதவியாளர் சேவை)	இடர்	ரூ. 59,784.00	சட்ட மாஅதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது..
ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள்				
13	எச்.டபிள்யு. தயா ரஞ்சித்	விழா -1,250.00 இடர் -39,930.00	ரூ. 41,180.00	2021 ஏப்ரல் மாதம் தீர்க்கப்பட்டது.
இறப்பெய்திய உத்தியோகத்தர்கள்				
13	ஆர். ஏ. எம். எல்.எச்.கே. பண்டாரநாயக (குறியீட்டு எழுதுனர்.)	விழா	ரூ. 2,700.00	2021 ஆண்டு தீர்க்கப்பட்டது.
14	கு.எஸ்.சீ. தயாரத்ன (புள்ளிவிபர உத்தியோகத்தர்)	விழா -2,500/= விசேட - 400/= இடர் - 63.000/=	ரூ. 65,900.00	2022 ஒக்டோபர் மாதம் தீர்க்கப்பட்டது.
15	கே.விக்னேஸ்வரன் (குறியீட்டு எழுதுனர்.)	விழா - 3,750/= இடர் - 89.000/=	ரூ. 92,750.00	மரண பணிக்கொடையை தயாரிப்பதற்கான ஆவணங்கள் சரி செய்யப்பட்டு. ஓய்வூதியத் திணைக்களத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. இறப்பு பணிக்கொடை வழங்கப்பட்ட பின்னர் தீர்வு செய்யப்பட முடியும்.

திணைக்களத்தின் பெயர் : **கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
2016.03.31 ம் திகதி இல. 5/2016 உடைய அரச நிதி சுற்றறிக்கையின் படி பௌதீக பொருட் பரிசோதனை உரிய தினத்தில் மேற்கொண்டு உரிய அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	ஒப்புக்கொள்கின்றேன். 2020 ம் ஆண்டுக்கான பௌதீக பொருட் பரிசோதனை ஏற்கனவே நிறைவடைந்துள்ளதுடன் அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனால், 2021ம் வருடத்திலிருந்து நிலையான சொத்து மதிப்பபீட்டு அறிக்கையினை உரிய தினத்திற்கு முன்பதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது.
வருடாந்த பொருட் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படிகள், குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள், ஏனைய பரிந்துரைகள் உரிய காலப்பகுதிக்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	ஒப்புக்கொள்கின்றேன், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கின்றேன்.
குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	2020 மற்றும் 2021ம் வருடங்களில் காணப்பட்ட கொரோனா வைரஸ் நிலைமையின் காரணமாக மற்றும் 2022ம் வருடத்தில் காணப்பட்ட கொரோனா வைரஸ் நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடியினால் உத்தியோகத்தர்கள் உரிய முறையில் சேவைக்கு சமூகமளிக்காததனால் 2020, 2021 மற்றும் 2022 வருடங்களுக்குறிய குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை உரிய காலத்தினுள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க முடியாது போனது. ஆனாலும், அனைத்து அறிக்கைகளும் தற்போது கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன். எதிர்வரும் காலங்களில் உரிய காலப்பகுதியினுள் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பான பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை.	2020ம் வருடத்தில் காணப்பட்ட கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக அத்தியாவசிய உத்தியோகத்தர்கள் மட்டும் சேவைக்கு சமூகமளித்ததனால் உரிய முறையில் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பான பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை.

<table>
<tr><td></td><td>ஆயினும், 2021ம் வருடத்தின் மார்ச் மாதத்தில் குழும வாகனங்களின் எரிபொருள் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், மீண்டும் 2022ம் வருடத்தில் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடி மற்றும் எரிபொருள் விநியோகத்தில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக வாகனங்களின் எரிபொருள் தாங்கிகளை முற்று முழுதாக நிரப்புவதற்கு முடியாமல் போன காரணத்தினால் அவ்வருடத்திற்குரிய எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்ள முடியாமல் போனது. போதுமானளவு எரிபொருள் பெற்றுக்கொள்ள முடிந்ததன் பின்னர் உரிய முறையில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்கின்றேன்.</td></tr>
<tr><td>நி.பி. 94 (1) இன் படி செலவின தலைப்பிற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை பயன்படுத்திய பின் மிகுதியாகவுள்ள ஒதுக்கீட்டு வரம்பை மீறுகின்ற வகையில் பொறுப்புக்களை உருவாக்கியிருத்தல்.</td><td>ஓப்புக்கொள்கின்றேன், எதிர்வரும் வருடங்களில் ஒதுக்கீட்டு வரம்புகளை மீறுகின்ற வகையில் பொறுப்புக்களை உருவாக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.</td></tr>
<tr><td>ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளின் இருப்பு.</td><td>ஒருவருடத்திற்கு மேலாக காணப்படும் கடன் பட்டோர் மீதியை வசூலித்துக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>திகதி</th><th>கடனை வசூலித்துக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்</th></tr>
<tr><td>2015.09.03</td><td>எம்.எஸ்.பீ.பெரேரா அவரிகளினால் அரசிடம் பெற்றுக்கொண்ட கடன் தொகை மற்றும் அரைவாசிச் சம்பள விடுமுறை என்பவற்றுக்கான பணத்தொகையினை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக அவருக்கு அறிவித்தல்.</td></tr>
<tr><td>2015.10.07</td><td>அரசிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகை மற்றும் அரைவாசிச் சம்பள விடுமுறை என்பவற்றுக்கான பணத்தினை வசூலிப்பதற்காக எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களுக்கு அனுப்பிய கடிதத்திற்கு முதலாவது நினைவூட்டல் கடிதம் அனுப்பப்படல்.</td></tr>
<tr><td>2015.11.03</td><td>அரசிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகை மற்றும் அரைவாசிச் சம்பள விடுமுறை என்பவற்றுக்கான பணத்தினை வசூலிப்பதற்காக எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களுக்கு அனுப்பிய</td></tr>
</table></td></tr>
</table>

		கடிதத்திற்கு இரண்டாவது நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது.
	2015.11.18	எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களின் சொத்து பற்றிய உறுதியை பெற்றுக்கொள்வதற்காக கோட்டை பிரதேச செயலாளருக்கு அறிவித்தல்.
	2016.06.09	அரசிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகை மற்றும் அரைவாசிச் சம்பள விடுமுறை என்பவற்றுக்கான பணத்தொகையினை வசூலிப்பதற்காக மூன்றாவது நினைவூட்டல் கடிதம் எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களுக்கு அனுப்புதல்.
	2016.06.09	எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களின் சொத்து பற்றிய உறுதியை பெற்றுக்கொள்வதற்காக கோட்டை பிரதேச செயலாளருக்கு முதலாவது நினைவூட்டல் கடிதத்தினை அனுப்புதல்.
	2016.10.20	சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களின் கடன் தொகையினை வசூலித்துக்கொள்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.
	2016.12.08	2017.01.06 ம் திகதி மேலதிக பணிப்பாளர் நாயகம் மற்றும் நிர்வாக உத்தியோத்தர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சென்று அவ் உத்தியோகத்தர்களுடன் சட்ட நடவடிக்கைகளுக்கு முந்தைய கலந்துரையாடலில் பங்குபற்றுதல்.
	2018.07.23	மேலதிக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக கடன் உடன்படிக்கையின் உறுதிப்படுத்திய பிரதி மற்றும் கணக்கறிக்கையின் உறுதிப்படுத்திய பிரதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2018.07.23 இல் சமர்ப்பிக்கப்டல்.

	2018.10.15	சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் இலங்கை குடியரசிற்கு அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டிய கடன்தொகையை 2018.10.15ம் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்துமாறும், அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் அந்த கடன் தொகையினையும் அதன் வட்டி மற்றும் வழக்கு செலவுடன் அறவிட்டுக்கொள்வதற்காக வேறு எவ்விதமான அறிவித்தலுமின்றி வழக்கு தொடரப்படும் என எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களின் தரப்பட்ட முகவரிக்கு அழைப்பாணை அனுப்பிவைக்கப்படல்.
	2018.12.03	சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2018.11.08 திகதிய எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிட்டுக்கொள்வதற்காக செய்யப்பட்ட முறையீட்டின் வரைவினை சரிபார்ப்பதற்கு மற்றும் முறைப்பாட்டினை நிரூபிப்பதற்கு தேவையான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டமைக்கமைய குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்கு தேவையான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.
	2019.01.09	சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அழைப்பாணை "வதிவிடத்தில் இல்லை" என மீண்டும் திருப்பியனுப்பட்டுள்ளதனால், அவரது தற்போதைய முகவரிவை பெற்றுத் தருமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 11.12.2018 திகதியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களின்

		வதிவிடத்தினை உறுதிபடுத்துமாறு, 19.12.2018 திகதியில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலாளர் மற்றும் 2019.01.09 திகதியில் தேர்தல் ஆணையாளர் என்போரினை விசாரித்தல்.
	2019.03.12	ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலாளரினால் எம்.எஸ்.பீ.பெரேரா அவர்கள் ஒருவருடத்திற்கு முன்பு இருந்த வதிவிடத்தை விற்று பதிவை விலக்கிக்கொண்டுள்ளமை பற்றி 2019.02.05ம் திகதி அறிவிக்கப்பட்டமையால் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் தேர்தல் திணைக்களத்திற்குச் சென்று வாய்மூல விசாரிப்பின் பின் எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களின் முகவரி தொடர்பாக தெரிந்துகொண்டு அது தொடர்பான விபரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல்.
	2019.06.20	சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இலங்கை அரசிற்கு அறவிடப்படவேண்டிய கடன் தொகையை 2019.05.10ம் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்துமாறும், அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து அக்கடன் தொகை மற்றும் அதனது வட்டி மற்றும் வழக்கிற்கான கட்டணம் ஆகியவற்றை அறவிடுவதற்காக எவ்வித முன் அறிவித்தலுமின்றி வழக்கு தொடுக்கப்படும் என்றும் எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களின் புதிய தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலுக்கு அத்திணைக்களத்திற்கு 2019.06.20ம் திகதி வரைக்கும் பதில் கிடைக்கவில்லை என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்தல்.
	2019.11.27	எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களின் கடன் மீதியை அறவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருப்பதாகவும், 2020.03.20 திகதியில் அழைப்பாணை அறிக்கைகள்

		அழைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இத்திணைக்களத்திற்கு அறிவித்தல்.
	2020.06.18	2021.01.22 அழைப்பாணை அறிக்கைகள் அழைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இத்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டமை.
	2021.01.26	எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களினால் மீண்டும் செவையில் இணைந்துகொள்வது தொடர்பாக கோரப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு 2020.09.12ம் திகதியில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேல்முறையீடு தொடர்பாக நடவடிக்கையெடுப்பதற்காக, குறித்த உத்தியோகத்தரின் தனிநபர் கோப்பு மற்றும் உரிய பின் இணைப்பு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு 2020.10.19ம் திகதியில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட அறிவித்தலுக்கமைய, இவ் உத்தியொகத்தர் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருக்கின்றமையால் அக்கோவையை விடுவிப்பது சிரமமானதென இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்தல்.
	2021.04.07	எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களினால் அழைப்பாணைக்கு வழங்கப்பட்ட பதில் தொடர்பாக இத்திணைக்களத்தின் அவதானிப்பை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.
	2021.11.02	சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரினால் 2021.07.11 சமரச வேண்டுகோள்விடுக்கப்பட்டதாகவு

		ம், அதனை பரீசிப்பதற்கு இவ் உத்தியொகத்தரை மீண்டும் அரச சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பாக முதலில் தீர்மானமெடுக்கப்படவேண்டுமென வும், அதற்காக அவரின் தனிநபர் கோப்பினை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு சட்டமா அதிபரின் அறிவுரைகளை பெற்றுக்கொள்வதற்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது.
	2022.05.18	2021.11.02 திகதியில் சட்டமா அதிபரின் அறிவுரைகளை பெற்றுக்கொள்வதற்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு 2022.03.25ம் திகதியில் நினைவூட்டல் கடிதத்தினை அனுப்பி வைத்தல்
	2022.05.18	இவ் உத்தியோகத்தரை மீண்டும் அரச சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பாக அவரது தனிப்பட்ட கோவையினை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புது சம்பந்தமாக சட்டமா அதிபர் அறிவுரை வழங்குதல்
	2022.06.09	சட்டமா அதிபரின் அறிவுரையினை செயற்படுத்துவது தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினை விசாரித்தல்.
	2022.08.05	வழக்கிற்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அ.சே.ஆ இடமிருந்து தனிப்பட்ட கோவையினை பெற்றுக்கொள்வதற்கு முடியும் என்பதனை குறிப்பிட்டு இ.சே பணிப்பாளர் நாயகம் பதில் கடிதமொன்றினை அனுப்புதல்.
	2022.09.12 2022.11.08 2022.12.19	எம்.எஸ்.பீ.பெரேரா அவர்களை மீண்டும் அரச சேவையில் இணைத்துக்கொள்வது சம்பந்தமாக தேவையான ஆவணங்கள் அ.சே.ஆ இற்கு சமர்ப்பிக்கக்கூடிய வகையில் இ.சே பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்தல்.

நி.பி. 371க்கமைவாக வெளியிடப்பட்ட உரிய செயற்பாடுகள் இடைக்கால செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டு ஒரு மாதகாலத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்காமை	2020ம் வருடத்தில் காணப்பட்ட கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை மேற்கொள்ள முடியாமல்போனது. ஆயினும் எதிர்வரும் காலங்களில் சுற்றறிக்கைக்கமைவாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்திருக்கின்றேன்.
குடிமக்கள்/ சேவை பெறுனர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை	2020ம் வருடத்தில் காணப்பட்ட கொவிட் 19 வைரஸ் நிலைமை காரணமாக அத்தியாவசிய உத்தியோகத்தர்கள் மட்டும் சேவைக்கு சமூகமளித்ததனால் 2020 வருடத்தினுள் இத்திணைக்களத்தின் குடிமக்கள்/ சேவை பெறுனர் சாசனம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆயினும், தற்பொழுது இத்திணைக்களத்திற்காக குடிமக்கள்/ சேவை பெறுனர் சாசனம் தயாரிக்கப்பட்டுவருகின்றது. அதே நேரத்தில் குடிமக்கள்/ சேவை பெறுனர் சாசனத்தை செயற்படுத்துவது தொடர்பான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்காக பொருத்தமான முறைமையொன்றினை தாயரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
நிறுவனத்தில் குடிமக்கள்/ சேவை பெறுனர் சாசனத்தை செயற்படுத்துவது தொடர்பான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்காக நிறுவனத்தினால் முறைமையொன்று தயாரிக்கபடாதிருத்தல்.	
அரச நிர்வாக விதிமுறைகளுக்கமைய உரிய முறையில் தயாரிக்கப்பட்ட மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை.	2020ம் வருடத்தில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக அத்தியாவசிய உத்தியோகத்தர்கள் மட்டும் சேவைக்கு சமூகமளித்ததன் அடிப்படையில் 2020ம் வருடத்திற்காக மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆயினும் இத்திணைக்களத்திற்காக 2021 மற்றும் 2022 வருடங்களுக்காக மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருப்பதுடன், 2023 மற்றும் 2024 வருடங்களுக்காக ஏற்கனவே மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.
தயாரிக்கப்பட்டுள்ள மனித வள திட்டத்தின் மூலம் ஒரு உத்தியோகத்தருக்கு வருடத்திற்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியால பயிற்சி திட்டமிடப்பட்டிருக்காமை.	2020 மற்றும் 2021ம் வருடங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள மனித வள திட்டத்திற்கமைய, ஒரு உத்தியோகத்தருக்கு வருடத்திற்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியால பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 2023 மற்றும் 2024 வருடத்திற்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகின்ற மனித வள திட்டத்தில் ஒரு உத்தியோகத்தருக்காக வருடத்திற்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியால பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
மனித வள அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு திறன் மற்றும் திறன் மேம்பாட்டு வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நிறுவனத்திற்குள் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருக்காமை	2021ம் வருடத்திலிருந்து மனித வள அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல், நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது சம்பந்தமான பொறுப்பு, இத்திணைக்களத்தின் பணிப்பாளர் (நிர்வாகம்) திரு. டி.ஏ.டீ.டீ.ப்ரேமரத்ன அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	மிகைகள், பற்றாக்குறைகள் எவையும் காணப்படாததுடன் ஏலமிடல் உட்பட்ட அகற்றல் நடவடிக்கைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
வங்கி இணக்க கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல் செய்யப்படவேண்டிய மீதிகள் ஒருமாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	ஆவணங்களை உரிய முறையில் பேணுமாறு உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.
ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	இத் திணைக்களத்தின் அலுவலர்கள் மூன்று பேரினது கடன் மீதி 354,178.90 ரூபாவினை அறவிட வேண்டியுள்ளதுடன் இதுவரை இவர்களில் இரண்டுபேர் மரணித்துள்ளதுடன் ஒருவர் அலுவலக உதவியாளர் சேவையில் பதவி வகிப்பவர் என்பதுடன் அவர் சேவையினை விட்டு விலகியுள்ளார். இத்தொகையில் மரணித்த ஒரு அலுவலரின் மனைவி முழுக் கடன் தொகையான 102,498.60 ரூபாவினை 2022.09.22 ஆந் திகதியும், மற்றைய மரணித்த அலுவலரின் மனைவி கடன் தொகையை 10 தவணைகளில் செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளதுடன் அவற்றுள் ஒரு தவணைப்பணமான 10,000.00 ரூபாவினை 2022.10.13 ஆந் திகதியும் செலுத்தியுள்ளனர். இதன்படி ரூபா. 112, 498.60 இதுவரை அறவிடப்பட்டுள்ளதுடன் மேலும் அறவிடப்படவேண்டிய தொகை ரூபா. 241,680.30 ஆகும். மற்றும் சேவையினை விட்டு விலகியுள்ள அலுவலக உதவியாளரின் கடன் மீதி தொடர்பாக அ.க.சு. 05/2019 இன் 03(ஈ) பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கைக்காக கோவை சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது.
பொது சேமிப்பு கணக்கில் காலங்கடந்த வைப்புகள் தொடர்பாக நி.பி.குறிப்பு 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை.	பொது சேமிப்பு கணக்கில் காலங்கடந்த வைப்புகள் தொடர்பாக நி.பி.குறிப்பு 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : அபிவிருத்தி நிதித் திணைக்களம

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
குறைபாடுகள் எதுவம் இல்லை	தொடர்புடையதல்ல

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
அபிவிருத்தி நிதித் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : தேசிய திட்டமிடல் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
இருப்பு வாகனங்களுக்கான நாளாந்த இயக்க குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இருப்பு வாகனங்களுக்காக நாளாந்த இயக்க குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பன தயாரிக்கப்பட்டு 2022 ஆவணி மாதத்திலிருந்து மாதாந்தம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் பிரகாரம்இ ஊழியர் ஒருவருக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணிநேரப் பயிற்சி முடிக்கப்படவில்லை. அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கியதாக செயற்திறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்படவில்லை.	உலகளாவிய தொற்றுநோயான கொவிட்-19 காரணமாக 2020 மார்ச் மாதத்திலிருந்து நாடு முழுவதும் அவ்வப்போது முடக்கப்பட்டமை மற்றும் கொவிட்-19 வழிகாட்டுதல்களின் பிரகாரம் பாடநெறிகள் நிகழ்த்தப்படாமையால்இ அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மனித வளத் திட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை செயற்படுத்த முடியவில்லை. நிகழ்நிலை பாடநெறிகள் நடைபெறுவதற்கு தொடங்கியதிலிருந்து, 2021 முதல் பாதியில் இருந்து, பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அதிகாரிகள் ஈடுபடுவதினூடாக தமது பயிற்சித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். மேலும், குழு அடிப்படையில் திணைக்களத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட பல கருத்தரங்குகள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதுவரை அனைத்து ஊழியர்களுக்கும் செயல்திறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
தேசிய திட்டமிடல் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **இலங்கை சுங்கம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்பட்டிருக்கவில்லை.	சுங்கத் திணைக்களத்தின் பல்வேறு பணிப்பங்களிலிருந்து தகவல்களைப் பெற்று, இறுதிப் பதில்கள் தயாரிக்கப்பட்டு வருவதன் காரணமாக பதில் அனுப்புவதில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகிறது. எதிர்காலத்தில் பதில்களை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்குமாறு திணைக்களத்தின் அனைத்து பணிப்பகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.
வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு ஆறு மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் விற்றொழிக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்குவதற்காக வாகனங்களை அடையாளம் காணும் குழுவானது, குறித்த வாகனங்கள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொண்டு, குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட வாகனங்கள் மாத்திரமே பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளன.
2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை	நாட்டில் நிலவிய கொரோனா நோய்த் தொற்று நிலைமை காரணமாக எரிபொருள் தகனம் பற்றிய சோதனையினை மேற்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டன.
வங்கி இணக்க கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயலாற்றி குறித்த மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	• சீராக்கல் செய்யப்படுவதற்காக எதிர்வு கூறப்பட்ட கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள், தேறாத பெறுகைகள், அடையாங்காணப்படாத கொடுப்பனவுகள் என்பன தற்பொழுது தீர்க்கப்பட்டுள்ளன. • மாதாந்த வங்கி கணக்கு இணக்கக் கூற்றுக்களை தயாரிக்கையில் சீராக்கல் செய்யப்பட வேண்டுமென அடையாளங்காணப்பட்ட மீதிகள், நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

	மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
நி.பி. 94 (1) இன்படி செலவு விடயமொன்றுக்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருக்கவில்லை.	சுங்கத் திணைக்களத்திற்கு அதிகளவிலான உப அலுவலகங்கள் காணப்படுவதோடு, நிதியாண்டு முடிவடைந்த பின்னரும் பொறுப்புக்கள் நடைமுறை ரீதியாக அறிக்கையிடப்படுவதனால் ஒதுக்கீட்டு வரம்பினை விஞ்சிய பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும், எதிர்காலத்தில் ஒடுக்கீட்டு எல்லையினுள் பொறுப்புக்களை நிருவகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படாமல் உள்ளன.	• 05 வருடங்களுக்கு மேற்பட்டு, இடமாற்றம் பெற்ற 04 அலுவலர்களில் ஒருவரிடமிருந்து மாத்திரம் நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட்டுள்ளதோடு, ஏனைய மூன்று அலுவலர்கள் பற்றிய தகவல்களைக் கோரி பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன. தகவல்கள் கிடைக்கப் பெற்றதும் குறித்த அலுவலர்களிடமிருந்து நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. • பணித்தடை செய்யப்பட்ட 15 அலுவலர்கள் தொடர்பிலான ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதானால், குறித்த விசாரணை நிறைவுற்றதும் குறித்த அலுவலர்களிடமிருந்து நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. • இறந்த 06 அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்ற 11 அலுவலர்கள் தொடர்பாக, ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறவிக்கப்பட்டுள்ளது. தகவல் கிடைத்தவுடன், குறித்த அலுவலர்களின் இறப்பு பணிக்கொடையிலிருந்து அல்லது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. • 05 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு காரணங்களால் தீர்க்கப்படாத நிலையிலிருந்த கடன் நிலுவைகளில் இருந்து ரூ.25000.00 இற்கு குறைவான நிலுவைக் கடன் மீதிகளைப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக. நி.ஓ 113 இற்கு அமைய, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் 2022.12.30 ஆம் திகதிய அங்கீகாரத்திற்கு அமைய ரூ.229,102.01 பத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டது.
நி.ஒ. 371 இன் பிரகாரம், வெளியிடப்பட்ட	வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு

பணி குறித்த இடைக்கால கட்டு நிதி, பணி முடிவுற்று ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படாதிருந்தமை	நிதி தீர்க்கப்பட்டுள்ளது. தற்பொழுது வெளியிடப்படுகின்ற பணி குறித்த இடைக்கால கட்டு நிதியானது, நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்த்துவைக்கப்படுகின்றன.
நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற இணையதளம் மூலமாக பொதுக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்புப் பதிவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கை சுங்கத் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு குறித்த வசதிகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது எடுக்கப்பட்டுவருகின்றன.
நிறுவனம் தனது விடயப் பரப்பிற்கிணங்க நிலை பெறுதகு நோக்கங்களை இனங் கண்டிருக்கவில்லை.	நிலைபெறுதகு நோக்கங்கள் இனங் காணப்பட்டுள்ளன. 1. அரச வருமானங்களை முறையாக சேகரித்தல். 2. சர்வதேச வர்த்தகத்தகத்திற்குத் தேவையான வசதிகளை வழங்குதல். 3. சுங்கச் சட்டம் மற்றும் தொடர்புடைய பிற சட்டங்களை அமுலாக்கல் மற்றும் மோசடிக்கு எதிராக நடவடிக்கைக எடுத்தல். 4. சமூக, சுற்றுச்சூழல் மற்றும் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.
இனங்கண்ட நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருக்க வில்லை.	இனங்கண்ட நிலைபெறுதகு நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக, அந்தந்த நோக்கங்கள் உப தலைப்புகளின் கீழ் வகுக்கப்பட்டு, அவை திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட பணிப்பகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்நதந்தப் பணிப்பகங்கள் ஊடாக இலக்குகளை அடைவதற்குத் தேவையான செயற்திட்டம் மற்றும், அவற்றினை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றுகைத் திட்டம் என்பனவற்றினைத் தயரிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.
நிறுவனத்தின் நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலுடன் ஏற்புடைய குறித்துரைத்த தரப்பினர்கள் இனங் காணப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதுடன் தொடர்புபற்ற தரப்பினர்கள் இனங் காணப்பட்டுள்ளதோடு, குறித்த தரப்பினர்கள் என திணைக்களத்தின் பல்வேறு பணிப்பகங்கள் மற்றும் உப பணிப்பகங்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு அவற்றிற்கு இலக்குகளும் வழங்கப்பட்டுள்ளன.
2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய இலக்கம் MsDW/08/65 சுற்றறிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறைவேற்றவேண்டிய நிலைபெறுதகு அபிவிருத்திப் பணிகளை இணைப்பாக்கம் செய்வதற்காக நியமிக்கப்பட வேண்டிய இரண்டு பிரதிநிதிகள் பற்றிய விபரங்கள் அமைச்சுக்கு அறிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை;	இதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பிரசைகள் /சேவை பெறுநர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை	சுங்கச் செயற்பாடுகள் சர்வதேச வர்த்தகத்துடன் நேரடியாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளதோடு, இது எப்பொழுதும் சர்வதேச சமவாயங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களின் பிரகாரம் செயற்படுத்தப்படுதலும் வேண்டும். கியோட்டோ உடன்படிக்கை (RKC) மற்றும் உலக வர்த்தக அமைப்பு என்பனவற்றுடன் கைச்சாத்திடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட வர்த்தக வசதிகளை வழங்கல் ஒப்பந்தம் (WTO-TFA) என்பன அதற்கான உதாரணங்களாகும். அதற்கமைய, சேவைகளை வழங்குவது தொடர்பில் ஏற்படுத்தப்படுகின்ற சமவாயங்கள் எப்போதும் சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களின் உள்ளடக்கத்துடன் பொருந்திச் செல்லல் வேண்டும்.மேலும், இலங்கை சுங்கமானது, இற்றை வரையில் சுங்கப் பணிகளோடு தொடர்பற்ற சேவை பெறுநர்களுக்காக நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOP) அடையாளம் கண்டுள்ளதோடு, அவற்றில் சிலவும் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாறே, குறிப்பாக இறக்குமதி சேவைகள் தொடர்பாக கால அட்டவணையினை வெளியிடுவது தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டுவருவதோடு, அதன்படி, ஒவ்வொரு பணிக்கும் தேவையான கால அட்டவணை ஆய்வுசெய்யப்பட்டு, அது குறித்த தகவல்களும் பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக இணைய தளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன. சேவை பெறுநர்கள் சுங்க இணையதளத்தை அணுகுவதன் மூலம் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம், மேலும், சர்வதேச வர்த்தகம் தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக சுங்கத்தில் விசேட விசாரணை மையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் பிரசைகள் /சேவைபெறுநர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் சேவை வழங்கலுடன் தொடர்பான நடவடிக்கைகள் சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்கள் என்பனவற்றிற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றன, அதற்கமைய, நிறுவனத்தின் வகிபங்கு தற்போது உலக வங்கி பிரதிநிதிகளால் கண்காணிக்கப்படுகின்றன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் / வழுக்கள் சரி செய்யப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாமலிருக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு

பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
சுங்கப் பணிப்பாளர் நாயகம்
இலங்கை சுங்கம்

திணைக்களத்தின் பெயர் : **இலங்கை மதுவரித் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
சேதங்கள் பற்றிய பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தற்போது சேதங்கள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாதத்தினுள் பதில் வழங்கப்படவில்லை.	தற்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்தினுள் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்வில்லை.	தற்போது உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்தினுள் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	தற்போது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2016.03.31 ஆம் திகதிய, 5/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	நாட்டில் நிலவும் கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக திட்டமிட்டவாறு பொருட் கணக்கெடுப்பை பூர்த்தி செய்ய இயலவில்லை என்பதுடன் தற்போது கணக்கெடுப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அகற்றல் நடவடிக்கைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளது.
ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. வாகனம் ஒன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு ஆறு மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் ஒழிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனம் ஒவ்வொன்றுக்குமான வாகன சம்பவ பதிவேடுகள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்படவில்லை.	தற்போது ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்காக வாகன ஓட்டக் குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருவதுடன், ஒவ்வொரு மாதத்திற்கும் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாவனையிலிருந்து விலக்கப்பட்ட வாகனங்கள் இருந்ததுடன் அவை தற்போது அகற்றப்பட்டுள்ளன. பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு ஆறு மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாகனம் ஒவ்வொன்றுக்குமான வாகன சம்பவ பதிவேடுகள் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வங்கி இணக்கக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல் செய்யப்படவேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின்படி செயலாற்றி குறித்த மீதிகள் ஒருமாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	வங்கி இணக்கக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல் செய்யப்படவேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின்படி ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் வரம்பைக் கடந்து செலவு செய்யப்பட்டிருந்தன.	திணைக்கள நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு நி.ஒ. 94 (11) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நி.ஒ. 94 (1) இன்படி செலவு விடயமொன்றுக்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தது.	திணைக்கள நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு நி.ஒ. 94 (11) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. • பிணைப்பொறுப்பாளரின் சம்பளத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுத்தல். • மரணப் பணிக்கொடையைப் பெறுதற்காக உரிய ஆவணங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. • உரிய அலுவலர்களுக்கு கடனைச் செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. • மீள சேவையில் அமர்த்தப்பட்ட அலுவலர்களின் கடன் மீதியை சம்பளத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. • நீதிமன்ற விசாரணை நடைபெறும் வழக்கு நிறைவு பெற்றவுடன் உரிய அலுவலர்களின் கடன்மீதியை ஒன்றாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.
காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பொது வைப்புக் கணக்கின் காலாவதியான வைப்புகள் தொடர்பில் 2021.04.28, 2021.07.12, 2021.12.03, மற்றும் 2021.12.30 ஆம் திகதிய நி.ஒ.. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.\
நி.ஒ 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி பணி குறித்த இடைக்கால கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தன என குழுவினால் இனங்காணப்பட்டிருந்தது.	நி.ஒ. 371 இன் எல்லையின் கீழ் இடைக்காலக் கட்டுநிதிக் கணக்கை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கட்டுநிதி கணக்கின் நிலுவை திறைசேரி ஏடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து மாற்றங்கள் மாதாந்தம் வெளிக்கொணரப்படவில்லை.	கட்டுநிதி கணக்கின் நிலுவை திறைசேரி ஏடுகளுடன் மாதாந்தம் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டதுடன் ஏதேனும் மாற்றம் ஏற்படின் அதனை உடனே சீர்செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன்.
2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க	2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணியாட்தொகுதியினரது தகவல்கள் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்படாமை.	முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணியாட்தொகுதியினரது தகவல்கள் 2021 இன் இறுதிக் காலாண்டு வரையான காலாண்டுகளின் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது.
பொதுமக்களால் கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்குதல்/வழங்காதிருத்தல் சம்பந்தமான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணிவரப்படவில்லை என வெளிப்படுத்தப்பட்டுள்ளது.. நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற வெப்தளம் மூலமாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்புப் பதிவதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.	பொதுமக்களால் கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்குதல்/வழங்காதிருத்தல் சம்பந்தமான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று தாபனப் பிரிவில் பேணப்பட்டு வருகிறது. மேற்படி தகவல்களை பொதுமக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு இணையத்தளம் ஒன்று தாபிக்கப்பட்டது.(excise.lk) அது 2021.11.29 ஆம் திகதி இற்றைப்படுத்தப்பட்டது. மேலே குறிப்பிட்ட இணையத்தின் ஊடாக பொதுமக்களின் தேவைகள், நிறுவனம் பற்றிய குற்றச்சாட்டுகள் அல்லது பாராட்டுகளை வெளிப்படுத்துவதற்கு (முறைப்பாடு செய்வதற்கு) வசதியளிக்கப்பட்டுள்ளது.
நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை.	244 சுட்டிகள், 169 இலக்குகள் மற்றும் 17 நோக்குகளைக் கொண்ட நிலைபேண்தகு அபிவிருத்தி 2030 இன் பொருட்டான நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் சகல விடயப் பரப்பிற்கிணங்கவும் நிலைபேண்தகு நோக்குகள் இனங்காணப்பட்டன. அவ்வாறு இனங்காணப்பட்ட நிலைபேண்தகு அபிவிருத்தி நோக்குகளாவன; • **நோக்கு 01** – சகல இடங்களிலும் நிலவுகின்ற வறுமையின் சகல வடிவங்களையும் முடிவுக்குக் கொண்டு வருதல். **01 ஏ 02** - அத்தியாவசிய சேவைகளுக்கு அரச செலவினம் -சமூகப் பாதுகாப்பு. ➢ வினைத்திறன்மிக்க மற்றும் பயனுறுதி வாய்ந்த சட்ட விரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் கட்டுப்படுத்தலின் ஊடாக சமூகப் பாதுகாப்பை வழங்குதல் • **நோக்கு 03** – நோயற்ற வாழ்வை உறுதிப்படுத்தி கசல வயதுடைய தரப்பினருக்கும் நலன்புரியை மேம்படுத்துதல். **03.5.2.** தீங்கு விளைவிக்கும் மதுபானப் பாவனை மற்றும் அபாயகர அவுடதங்கள்

	பாவனையை தடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சையை வலுப்படுத்துதல். • **நோக்கு 12** - நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்துதல் (பின்னர் இனங்காணப்பட்ட) 12.5.1. 2030 இல் கழிவு உற்பத்தியைத் தவிர்த்தல், குறைத்தல், மீள்சுழற்சி மற்றும் அவற்றை மீள பயன்படுத்துதல் என்பவற்றின் ஊடாக குறைத்தல். • **நோக்கு 16** – நிலையான அபிவிருத்தி பொருட்டு அமைதியான, முழுமையான சமுதாயத்தை ஏற்படுத்தல், நீதி பொருட்டு சகலருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மற்றும் சகல மட்டத்திலும் வினைத்திறன் மிக்க, பொறுப்புவாய்ந்த முழுமையான நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல். 16.5. சகல விதத்திலும் ஊழல் மற்றும் லஞ்சத்தை வெளிப்படையாகத் தெரியும் வகையில் குறைத்தல் 16.6. சகல மட்டத்திலும் வினைத்திறன்மிக்க, பொறுப்பு வாய்ந்த, வெளிப்படைத்தன்மையான நிறுவனம் ஒன்றை நிறுவுதல். • **நோக்கு 17** – நிலையான அபிவிருத்தி பொருட்டு உலகளாவிய ஒத்துழைப்பை செயற்படுத்தும் தேவைகளை வலுப்படுத்தல் மற்றும் புனர்வாழ்வு. 17.1. வரி மற்றும் ஏனைய வருமானம் சேகரித்தலை மேம்படுத்துவதற்காக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒத்துழைப்பை வழங்குதல் அடங்கலாக உள்நாட்டு வளங்களை பன்முகப்படுத்தல்.
இனங்கண்ட நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.	ஆம். இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சகல பிரிவுகளுக்குமான விடயப்பரப்பிற்கிணங்க உரிய பிரிவுத் தலைவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2020 இன் செயற் திட்டம், 2021 இன் செயற்திட்டம் என்பன பொருட்டு தெளிவான நோக்கங்கள், உபாயத்திறன்கள் மற்றும் செயற்பாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டிய பிரதான செயலாற்றுகை இலக்குகள் குறிப்பிடப்பட்டு செயற் திட்டங்கள் உரிய வருடங்களுக்கு தயாரிக்கப்பட்டன.
2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக ஈடேற்றவேண்டிய நிலைபெறுதகு அபிவிருத்திப் பணிகளை இணைப்பாக்கம் செய்வதற்காக நியமிக்கப்பட வேண்டிய இரண்டு பிரதிநிதிகள் பற்றிய விபரங்கள்	2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக ஈடேற்றவேண்டிய நிலைபெறுதகு அபிவிருத்திப் பணிகளை இணைப்பாக்கம் செய்வதற்காக நியமிக்கப்பட வேண்டிய இரண்டு பிரதிநிதிகள் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் 2019 – 2020

அமைச்சுக்கு அறிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.	இன் பொருட்டு நியமிக்கப்படவில்லை. எனினும் திணைக்களத்தின் செயற்திட்டம் மற்றும் செயலாற்றுகை அறிக்கை என்பன தயாரிக்கையில் அது தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்காக அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
பொதுநிருவாக ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஒட்டுமொத்த பணியாட்தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	இலங்கை மதுவரித் திணைக்களம் 2019 இற்குரிய மனித வளத் திட்டத்தை 2018 டிசம்பர் மாதமளவில் தயாரித்திருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஏப்ரல் மாதத்தில் மனித வளப் பிரிவிற்கு பிரதி மதுவரி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் மேல் மனித வளப் பிரிவின் சீருடை அலுவலர்களிற்கு 2019 இன் செயலாற்றுகைத் திட்ட உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு இறுதிச் செயலாற்றுகையும் மேற்கொள்ளப்பட்டது.
வரவுசெலவு சுற்றறிக்கைக்கிணங்க குறைந்த பட்சம் மூன்று வெளியீட்டுச் சுட்டிகள் இனங்காணப்பட்டு ஆவணப்படுத்தப் பட்டிருக்கவில்லை	வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கைக்கிணங்க மூன்று வெளியீட்டுச் சுட்டிகளை இனங்காணுதல், 2018 இன் இறுதியில் தயாரிக்கப்படும் 2019 இற்குரிய செயற் திட்டத்தின் பிரகாரம் 2019 இல் செயற்படுத்தப்பட்டது. அது 2018 இல் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் தற்போது அடைவுச் சுட்டிகள் இனங்காணப்பட்டு அவற்றை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நிறுவனத்தினால் ஈடேற்றப்படுகின்ற செயற்பொறுப்புடன் தொடர்புடைய 03 பிரதான செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இனங்கண்ட மூன்றாவது செயற்சுட்டியின் அடைவு 50 %ஐ விட குறைந்த மட்டத்தில் நிலவியது .	நிறுவனத்தின் 11 செயற் பிரிவுகளின் ஊடாக 19 சிறப்புச் சுட்டிகள் இனங்காணப்பட்டன. தற்போது இனங்காணப்பட்ட சிறப்புச் சுட்டிகளில் எதிர்பார்த்த அடைவுச் சதவீதமானது, 02 சிறப்புச் சுட்டெண்கள் தவிர ஏனையவற்றில் 50% இலக்கை அடைய முடிந்தது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக இலங்கை மதுவரித் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
மதுவரி ஆணையாளர் நாயகம்
இலங்கை மதுவரித் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
இழப்புக்களுக்கான பதிவேடு இற்றைப்படுத்தப்படவோ & பராமரிக்கப்படவோவில்லை	ஏற்கனவே இற்றைப்படுத்தப்பட்டு நிறைவுபடுத்தப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் அதிபதியின் அனைத்து கணக்காய்வு கேளிவிகளுக்கும் விடைகளை அத்தகைய கணக்காய்வு கேள்வி கிடைக்கப்பெற்று ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்கப்படவில்லை	ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாமதமின்றி கணக்காய்வு கேள்விகளுக்கான விடைகள் சமர்ப்பிக்கப்பட்டன. கோவிட் 19 பெருநோய் தொற்றின் போது நாடு முடக்கப்பட்டமை மற்றும் இடையிடையே ஊழியர்கள் அழைக்கப்பட்ட போது, விடைகளை தயாரிப்பதிலும் சமர்ப்பிப்பதிலும் தாமதங்கள் ஏற்ப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நாடு இயல்புநிலை அடைந்த பின்னர் இது திருத்தப்பட்டதுள்ளதுடன் விடைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
ஒரு மாத காலப்பகுதிக்குள் விடைகள் உள்ளக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டவில்லை	ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாமதமின்றி கணக்காய்வு கேள்விகளுக்கான விடைகள் சமர்ப்பிக்கப்பட்டன. கோவிட் 19 பெருநோய் தொற்றின் போது நாடு முடக்கப்பட்டமை மற்றும் இடையிடையே ஊழியர்கள் அழைக்கப்பட்ட போது, விடைகளை தயாரிப்பதிலும் சமர்ப்பிப்பதிலும் தாமதங்கள் ஏற்ப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நாடு இயல்புநிலை அடைந்த பின்னர் இது திருத்தப்பட்டதுள்ளதுடன் விடைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
அரச நிதிச் சுற்றறிக்கை இல. 05/2016 இன் பிரகாரம் கணக்கெடுப்பு நடைபெற்றப் பினர் உரிய நேரத்தில் கணக்காய்வாளர் அதிதிக்கு ஏற்புடைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை	2019.12.31 மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்கெடுப்பு, குறைவான நாட்களுக்கு அலுவலகம் திறக்கப்ப்டமை, பயணக் கட்டுப்பாடு விதித்தமை மற்றும் 2020 ஆம் ஆண்டில் கோவிட்ட 19 காரணமாக வரையறுக்கப்பட்ட ஆளணியினர் கடமை ஆற்றியமை ஆகிய காரணங்களினால் உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியவில்லை. எவ்வாறாயினும், 2016.03.31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இல் குறிப்பிட்டுள்ளவாறு, 2019.12.13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்கெடுப்பு அறிக்கையானது கணக்காய்விற்காக 2020, ஆகஸ்ட் மற்றும் செப்தம்பர் மாதங்களில் சமர்பிக்கப்பட்டது.
கணக்கெடுப்புக் குழுவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம் மற்றும்	கணக்கெடுப்புக் குழுவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் (மேலதிகம்/

பற்றாக்குறை மீதான பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் அமுல்படுத்தப்படவில்லை	பற்றாக்குறை) தொடர்பிலான பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் தாமதங்கள் இருந்த போதிலும், 2021/2022 ஆம் ஆண்டுகளினுள் அத்தகைய பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
பாவிப்புக்கு தகுதியற்றது என அகற்றப்பட்ட வாகனங்களை 06 மாதங்களின் பின்னரும் அகற்றாமை	இது கோவிட் 19 காரணமாக 2020 & 2021 ஆம் ஆண்டுகளில் மட்டும் நடைபெற்ற அசாதாரண நிலையாகும்.
ஒவ்வொரு வாகனத்திற்கும் பயணக் குறிப்பேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்படவில்லை	தற்போது (2023 சனவரி முதல்) முறையாக இற்றைப்படுத்தப்படுகின்றது.
அரச நிருவாக சுற்றறிக்கை இல. 30/2016 இன் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பாவனை பரீட்சிக்கப்படவில்லை	2022 ஆம் ஆண்டு முதல் எரிபொருள் பாவனையை பரீட்சிக்க திட்டமிட்டிருந்த போதும் 2022 ஆம் ஆண்டின் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் QR குறியீடு ஆகிய காரணங்களினால், எரிபொருள் பாவனையை பரீட்சிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதாக காணப்பட்டது.
வருட முடிவில் காணப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சிய பொறுப்புகள் நி.ஒ. 94(1) இன் பிரகாரம் எடுக்கப்பட்டுள்ளது	2020 ஆம் ஆண்டில் இடைக்கால கணக்கீட்டு நியமங்கள் நிலவிய பல சந்தர்ப்பங்களில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டன. 246-1-1-1302 மற்றும் 246-1-1-2001 ஆகிய செலவின விடயங்கள் தொடர்பில் நாம் கோரிய தொகையை விட ஏற்பாடு சய்யப்பட்ட தொகை குறைவாக காண்பட்டமையினால் மேலே குறிப்பிட்ட நிலவரம் உருவாகியுள்ளது. 2022 ஆம் ஆண்டில், ஏற்பாடுகளை விஞ்சிய பொறுப்புக்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை
செலுத்தப்படாத கடன் மீதி 1 வருடத்திற்கு மேற்பட்டு காணப்பட்டது	1 வருடத்திற்கு மேலாக கடனை செலுத்தாத உத்தியோகத்தர்களின் விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01)
செயற்படாத கணக்குகள் தொடர்பில் நி.ஒ. 371 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவில்லை.	2020 & 2021 இல் காணப்பட்ட கோவிட் 19 பெருநோய் தொற்று காரணமாக உத்தியோகத்தர்களின் இயல்பான செயற்பாடு குழப்பப்பட்டது. அதனால், இவ் வைப்புகளின் கொடுத்துதீர்ப்பானது சிறு தாமதத்துடன் மேற்கொள்ளப்படுகின்றது.
நி.ஒ. 371 இன் பிரகாரம் எழுந்தமான கட்டுநிதியானது அதன் செயற்பாடு முடிவடைந்து ஒரு மாதத்தினுள் தீர்க்கப்படவில்லை	நி.ஒ. 371 இன் பிரகாரம் செயற்பட ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
சேகரிக்கப்பட்ட வருவாய் உரிய நேரத்தினுள் முறையாக அகற்றப்படவில்லை.	வங்கிகளுக்கு பெறப்பட்ட வருவாய் தொடர்பில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் முறைமையில் மறுக்கப்பட்ட காசோலைகளை பதிவதற்கும் ஏற்புடைய வங்கிகளிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் திருத்தல் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் முறைமையினூடாக உருவாக்கப்பட்ட வருவாய் அறிக்கையுடன் வங்கியிலிந்து பெறப்பட்ட கணக்குகளின் அறிக்கையை ஒப்பிடுவதன் மூலம்

	குறைபாடுகளை அடையாளம் காண நடவடக்கைகள் எடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், வரையறுக்கப்பட்ட நேரத்தினும் மேற்கூறப்பட்ட செயன்முறையை அமுல்படுத்துவது மிகவும் கடிணமான பணி என தெரிவிக்கப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் நோக்கிற்கு ஏற்புடைய இலக்குகளின் நிலைபேறான அபிவிருத்தியை அடையாளம் காண அது தவறியுள்ளது.	நிறுவனத்தின் நோக்கிற்கு ஏற்புடைய இலக்குகளின் நிலைபேறான அபிவிருத்தியினை அடையாளம் கண்டுள்ளது.
அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியின் அடைவு நிலையை அளப்பதற்கு ஏற்ற செயற்திறன் இலக்குகள் அமைக்கப்படவில்லை	செயற்திறன் இலக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
தூண்டுகைக்கு ஏற்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுக்கு ஏற்ற குறிப்பிட்ட திறத்தினர் அடையாளம் காணப்படவில்லை	குறிப்பிட்ட திறத்தினதை அடையாளம் கண்டு முடிவாக்கப்பட்டது.
அரச நிருவாக ஏற்பாடுகளுக்கு ஏற்றமுறையில் வரையப்பட்ட மனித வள திட்டங்கள் காணப்படவில்லை	அரச நிருவாக ஏற்பாடுகளுக்கு ஏற்றமுறையில் மனித வள திட்டங்களின் வரைவு நிறைவுற்றுள்ளதுடன் இறுதி அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது.
தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டமானது, ஊழியர் ஒருவருக்கு குறைந்தபட்டசம் பன்னிரண்டு மனித்தியாலத்திற்கான பயிற்சியை வழங்குவதை உள்ளடக்கியிருக்கவில்லை	மனித வள அபிவிருத்தி திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
முழு ஆளணியினரையும் உள்ளடக்கிய செயற்திறன் ஒப்பந்தம் ஒன்று வரையப்படவோ அல்லது கைச்சாத்திடப்படவோ இல்லை	சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில், அனுமதி வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50% இற்கும் குறைவாகும்.	திணைக்களத்தின் சிறப்பு கடமைகள் மற்றும் தேர்தல் கடமைகளில் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டமையினாலும் நாட்டில் காணப்பட்ட கோவிட் 19 பெருநோய் தொற்று காரணத்தினாலும், திட்டமிட்டவாறு பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும், ஏற்புடைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.
கணக்காய்வு அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள்/பிழைகள் சரிசெய்யப்படவில்லை	இந்த பந்திகளில் கணக்காய்வு அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள்/ பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு

பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

இணைப்பு – 01

ஊழியர் இலக்கம்	பெயர்	கடன் மீதி (ரூபா)	கடன் மீதியை மீளப்பெறுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
6979	திருமதி ஜி. டி. குணசீலி .	191,514.00	உத்தியோகத்தர் மரணமடைந்துவிட்டார். அக்ரஹார காப்புறுதித் திட்ட நிதியத்திலிருந்து கடன் மீதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
3460	திரு ஈ.எம்.ஜே. பண்டார	199,162.00	2023.01.23 அன்று இவ் உத்தியோகத்தர் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். சம்பள மீதி செலுத்துவதற்கும் அந்த சம்பள மீதியிலிருந்து கடன் மீதியை மீளப்பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
3594	திரு. எஸ்.ஆர்.பி வேலப்பு ஆராச்சி .	252,045.00	கடன் மீதியை மீளப்பெறுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
7570	திரு. டபிள்யு.எம்.ஐ. மதுஷான்	148,000.00	கடன் மீதியை மீளப்பெறுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது
7673	திரு. டி.பி.பி. மில்ரோய்	120,847.44	கடன் மீதியை மீளப்பெறுவதற்கு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
6509	திரு.எம்.ஜி.ஜே.எஸ் பண்டார	-	இவ் உத்தியோகத்தர் தொடர்பிலான கடன் மீதி தவணை முறையில் மீளப்பெறப்பட்டுள்ளது என்பதுடன் 2022, திசம்பர் 31 அன்று கடன் மீதி ரூபா 13,180.25. ஆக காணப்பட்டது
8093	திருமதி. ஆர்.எம்.டி. செவ்வந்தி	-	இவ் உத்தியோகத்தர் தொடர்பிலான கடன் மீதி தவணைகளில் பெறப்பட்டுள்ளது.
7625	திரு. ஆர்.டபிள்யு. சாந்தசிரி	4,550.00	முன்னைய வேலைத்தளத்தின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை மீண்டும் கையளிக்காத காரணத்தினால் அவரது தனிநபர் கோவையினை அனுப்பி வைப்பதில் தாமதம் காணப்பட்டது அவரது தனிநபர் கோவை பெறப்பட்ட வேளையிலும் அவர் அவரது பதவியில் உறுதிபடுத்தப்படவில்லை. அவரது உறுதிபடுத்துகைக்கு அனுமதி பெறப்பட்டதன் பின்னர் அவரது சம்பள உயர்வின் மீதி வழங்கப்பட்டது. ஏற்புடைய தரத்திற்கு பதவிஉயர்வு வழங்கப்பட்டு அவர் ஓய்வுபெறவுள்ளார். ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் கடன் மீதியை மீளப்பெற திட்டமிடப்பட்டுள்ளது.
7433	திரு. எம். ஜி. ஜினசேன	146,380.00	45 வருட வயதெல்லை தாண்டியபின் அலுவலகர் ஒருவர் நாளாந்த அடிப்படையில் நியமனத்தைப்

			பெற்றுள்ளார். W&O.P. ஓய்வூதிய திட்டத்திற்கு பதிவு செய்வதில் உள்ள சிக்கல் காரணமாக W&O.P. இலக்கத்தினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக ஓய்வூதியத்தை தயாரிக்க முடியவில்லை. இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளுக்கு இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றவுடன் கடன் மீதியினை மீளப்பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் பெயர் : **இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் உரிய கால எல்லைக்குள் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது.
உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கப்படாமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.	அனைத்து உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் உரிய கால எல்லைக்குள் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டம் பற்றிய குறிப்பு மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படாமை.	ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டம் பற்றிய குறிப்பு மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பாவனையிலிருந்து அப்புறப்படுத்திய வாகனமொன்றை 06 மாதத்திற்கும் குறைந்த காலத்தில் பறிமுதல் செய்யப்படாமல் இருந்தமை.	WP MY 6615 ஆம் இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிளை, IECD/8/1/2/3/2012 இலக்கமுடைய 2022.06.28 ஆம் திகதிய கடிதம் மூலம் நிதியமைச்சுக்கு முறையாக கையளித்துள்ளதுடன் அவர்களால் குறித்த வாகனம் 2022.11.16 ஆம் திகதி ஏலமிடப்பட்டுள்ளது.
2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படாமை	இத் திணைக்களத்திற்கு சொந்தமான ஆறு (06) வாகனங்களில் இரண்டு (02) வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அச்சோதனைகளை நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தாலும் மீதமுள்ள நான்கு வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அட்டுறுக் கடன் நிலுவையொன்று காணப்பட்டு வருகின்றமை.	ஆர்.டி.எம்.ஜயவிக்ரம அவர்கள் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்திச் செல்லப்படுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான தற்போதைய நிலைமைகளை கேட்டறியும் முகமாக 2021.09.21 ஆம் திகதி நினைவூட்டல் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் பலமுறை தொலைபேசியூடாக முயன்றும் சரியான பதில் கிடைக்கப்பெறவில்லை. IECD/8/2/15 மற்றும்

	2023.06.06 திகதிய கடிதம் மூலம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு இரண்டாவது நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் தேவையான ஆலோசனைகளைப் பெற்ற பின் நடவடிக்கைகளை எடுக்கலாம்.
நி.பி.371 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட இடைக் கட்டுநிதிச் செயற்பாடுகள் முடிவடைந்தும் ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைக்கப்படாமல் இருந்தமை.	எதிர்வரும் காலங்களில் அவ்வாறான நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்குத் தேவையான அலுவல்கள் மேறகொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
கட்டுப்பாட்டாளர் நாயகம்
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
சேதங்கள் பற்றிய பதிவேடு புதுப்பிக்கப்பட்டுப் பேணப்படாமை.	தற்போது வரை சேதங்கள் பற்றிய பதிவேடு புதுப்பிக்கப்பட்டுப் பேணப்படுகிறது.
உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்தினுள் விடைகள் வழங்கப்படாமை.	விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களில் அலுவலர்கள் பாரிய வெற்றிடங்களுடன் பணியாற்றுகிறார்கள். அவர்கள் களப்பணிகளில் அநேகமாக ஈடுபடுவதால் அலுவலகத்திலிருப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், சிலவேளைகளில் கணக்காய்வு வினாக்களுக்கு விடையளிப்பது தாமதமடைகின்றது என்றாலும், தற்போது எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளது.
2017.06.26 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் பற்றிய சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களும் உபகரணங்களும் பற்றிய தகவல்கள் கொம்ட்ரோலர் அதிபதி அலுவலகத்திற்கு முன்னளிக்கப்படாமை.	2022 ஆம் ஆண்டு வரையான எல்லாச் சொத்துகளினதும் கொள்வனவு மற்றும் உபகரணங்கள் பற்றிய தகவல்கள் இப்போது வரை கொம்ட்ரோலர் அதிபதி அலுவலகத்திற்கு முன்னளிக்கப்பட்டுள்ளன.
2017.06.26 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் பற்றிய சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம், சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக, பொருத்தமான அலுவலரொருவரை நியமித்து, கொம்ட்ரோலர் அதிபதி அலுவலகத்திற்கு அறியத்தராமை.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக, இதுவரை அலுவலரொருவர் பெயரிடப்பட்டு, அது அறியத்தரப்பட்டுள்ளது.
வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் உள்ளடக்கப்படாத தேவைக்கதிகம் மற்றும் குறைபாடுகள் தொடர்பான சிபார்சுகள் பற்றி உரிய காலகட்டத்தினுள் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	தலைமை அலுவலகம், மாகாண அலுவலகங்கள் 19, சுற்றுலா விடுதிகள் இரண்டு ஆகியவற்றுக்குரிய பொருட் கணக்கெடுப்புச் செயற்பாடுகளின் உரிய சிபார்சுகளை நடைமுறைப்படுத்தும்போது தாமதங்கள் ஏற்பட்டிருப்பினும், இதுவரை 2021 வரையான நடவடிக்கைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
தற்போதுள்ள வாகனங்களுக்கு நாளாந்த பிரயாணப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த தொகுப்புகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு முன்னளிக்கப்படாமை.	2020 ஆம் ஆண்டின் பிரயாணப் பதிவேடுகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை மாதாந்தம் பிரயாணப் பதிவேடுகள் உரிய வகையில்

	கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றிக்கையின் 3.1 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி திணைக்களத்திலுள்ள வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமை.	திணைக்களத்தின் மட்டுப்படுத்தப்பட்ட வாகன எண்ணிக்கையுடன் நாளாந்தக் கடமைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், கொவிட் 19 பெருந்தொற்று நிலைமை ஏற்பட்டதால் இடைக்கிடை அலுவலகங்கள் பூட்டப்பட்டிருந்ததாலும் சில வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் பாவனை தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அறியத்தருகிறேன்.
வங்கிக் கணக்கிணக்கக் கூற்று மூலம் வெளிப்படுத்தப்பட்ட சரிப்படுத்தப்பட வேண்டிய மீதி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படி ஒரு மாதத்தினுள் மீள்நிரப்பப்படாமை.	இதுவரை சரிப்படுத்தப்பட வேண்டிய மீதிகள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காட்டப்படவில்லை என்பதுடன், நிதிப் பிரமாணத்தின்படி உரிய காலத்தினுள் எல்லா சரிப்படுத்தல்களும் நிறைவேற்றப்படும்.
ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு நிலுவையான கடன் மீதிகள் காணப்படல்.	நிலுவையான கடன் மீதிகளை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், ரூ 25,000/- இற்குக் குறைந்த கடன் மீதிகளை வெட்டியெடுக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ 25,000/- இற்குக் குறைந்த கடன் மீதிகள் மூன்று உள்ளன என்பதுடன், அவற்றில் இரண்டை அறவிடுவதற்கு ஆகக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்னும் அவற்றை அறவிட முடியாதிருப்பினும், கடன் முற்பணக் கட்டளையொன்று 2023.02.07 இல் பெறப்பட்டுள்ளது. இந்தக் குறைபாட்டைக் கணக்கில் சேர்ப்பதற்கு வரவுசெலவுக் குறியீட்டை அமைப்பதற்கு தேசிய வரவுசெலவுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், ஒதுக்கீடுகளை மாற்றிய பின்னர், இதற்குரிய வெட்டுதல்கள் கணக்கிற் சேர்க்கப்படும்.. மூன்று அலுவலர்களது கடன்களை அறவிடுவதற்கு சட்ட அலுவலர் மூலமாக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
சேகரிக்கப்பட்ட வருமானம் உரிய காலத்தினுள் முறையான விதத்தில் வெளியே அனுப்பப்படவில்லை.	சேவைபெறுநர்களால் நேரடியாக வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்பட்ட அறவீடுகளும் வைப்புகளும் உரிய ஆவண அலுவலகத்திற்குக் கிடைப்பதில் தாமதமடைவதை அடிப்படையாகக் கொண்டு, வருமானத்தைக் குறித்துக்கொள்வதிலும் தாமதங்கள் ஏற்படுகின்றன. நிலையான பின்னூட்டலின் மூலம் இதுவரை இந்த நிலைமை சரிப்படுத்தப்பட்டுள்ளது.
முழுமையான பணியாளர் குழாத்துக்கு உரிய செயற்றிறன் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு அதன்படி வைத்திருக்கப்படாமை.	மனிதவளத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான 02/2018 ஆம் இலக்கச் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எமது திணைக்களத்திற்குப் பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்ட செயற்றிறன் உடன்படிக்கை, 2023 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அனுமதிக்காக, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவுக்கான உதவிச் செயலாளருக்கு,

	2023.01.04 இல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2023.02.01 ஆம் திகதி தொடக்கம் செயற்றிறன் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் இதுவரை செயற்படுத்தப்பட்டுள்ளன.
திட்டமிடப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட பயிற்சிகள் 50% இற்கும் குறைவாகக் காணப்படுகின்றமை.	2019 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து காணப்பட்ட கொவிட் பெருந்தொற்று நிலைமை காரணமாக அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, அதைத் தொடர்ந்து ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக பயிற்சி வேலைத்திட்டங்களை எதிர்பார்த்தவாறு நடாத்த முடியவில்லை. எவ்வாறாயினும் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களுக்குரிய நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டதுடன், கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகளில் முடிந்தவரை முகாமைத்துவம் செய்து பயிற்சி நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.
கணக்காய்வாளர் தலைமையதிபதியால் கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் / தவறுகள் திருத்தப்பட்டிருக்காமை.	கணக்காய்வாளர் தலைமையதிபதியால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தவறுகள் ஏற்படாத வகையில் திணைக்கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு ஆகக்கூடிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
அரசாங்க பிரதான மதிப்பீட்டாளர்
அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
2004.05.11ம் திகதியின் 171/ 2004 என்ற இலக்கத்தினையுடைய அரச கணக்கீட்டு சுற்றறிக்கைக்கமைய அரசாங்கத்தின் சம்பளத்தினை தயாரிப்பது கணனி மென்பொருளுக்குறிய முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச் சொற்களை மூன்று மாத்திற்கொருமுறை மாற்றஞ் செய்யாமலிருந்தது.	2004.05.11 ம் திகதியிடப்பட்ட 171/2004ம் இலக்கத்தினையுடைய அரச கணக்கீட்டினைத் தயாரிக்கும் கணினி மொன்பொருளுக்குறிய முதலாவது. இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச் சொல் மாற்றஞ் செய்யப்பட்டதுடன் மூன்று மாதத்திற்கொருமுறை அக்கடவுச் சொல்லை மாற்றுவதற்குத் தேவையான உள்ளக ஒழுங்குமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
கணக்காய்வுத் தலைமையதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு ஐய வினாவின் பொருட்டும் ஒரு மாதத்திற்குப் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிட்ட கால வரையறைக்குள் கணக்காய்வு ஐயவினாவின் பொருட்டு பதிலை வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒரு சில சந்தர்ப்பங்களில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. அந்த நிலையினையும் கட்டுப்படுத்தி 07 அல்லது 14 நாட்களுக்குள் பதில்களை வழங்குவதற்கு பணியாளர் குழாம் விளக்கமளிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
உள்ளக கணக்காய்வு ஐய வினாவின் பொருட்டு ஒரு மாதத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிட்ட கால வரையறைக்குள் கணக்காய்வு ஐயவினாவின் பொருட்டு பதிலை வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒரு சில சந்தர்ப்பங்களில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. அந்த நிலையினையும் கட்டுப்படுத்தி 07 அல்லது 14 நாட்களுக்குள் பதில்களை வழங்குவதற்கு பணியாளர் குழாம் விளக்கமளிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2006.03.31ம் திகதியின் 5/2016 என்ற இலக்கத்தினையுடைய அரசாங்க நிதிச் சுற்றறிக்கைக்கமைய சொத்துக் கணக்கெடுப்பினை மேற்கொண்டு குறிப்பிட்ட தினத்தில் உரிய	2020ம் ஆண்டின் சொத்துக் கணக்கெடுப்பு அறிக்கை 2021.07.08ம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிக்கு 1 சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அங்கு

அறிக்கையினை கணக்காய்வுத் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை	2016.03.31ம் திகதியிடப்பட்ட 5/2016 இலக்கத்தினையுடைய அரச கணக்காய்வு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட / நாட்களுக்கேற்ப ஏழு நாள் சகல தாமதம் ஒன்று ஏற்பட்டுள்ளது. தலைமைக் காரியாலத்திலும் 25 மாவட்ட அலுவலகங்களிலும், மற்றும் 331 பிரதேச செயலகங்களிலும் சொத்துக் கணக்கெடுப்புச் செயற்பாடுகளில் ஏற்படும் ஒரு சில விரிவான காரணங்களினால் இவ்வாறான தாமதங்கள் ஏற்பட்டது. அந்த நிலைகளை முடியுமானளவு கட்டுப்படுத்திக் கொண்டு ஜூன் மாதம் 30ம் திகதியில் சொத்துக் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்வாளர் தலையைதிக்கு சமர்பிக்கக்கூடியவாறு உள்ளக நிர்வாக முறைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளது. 2021ம் ஆண்டின் சொத்துக் கணக்கெடுப்பு அறிக்கையானது 2022.06.09ம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிககு சமர்ப்பிக்கப்பட்டிருப்பது இந்த முறைப்படியான கட்டுப்பாட்டுககான உதாரணம் ஒன்றாகும்.
குழும வாகனங்களின் பொருட்டு நாளாந்த ஓட்டப் பதிவுகளும் மாதாந்த பொழிப்பறிக்கையும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது சகல வாகனங்களுக்கும் நாளாந்த ஓட்டப் பதிவுகள் மற்றும் பொழிப்பறிக்கை கணக்காய்வறிக்கைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
வாகனம் ஒன்றுமதிப்பிறக்கும் செய்யப்பட்டு 06 மாதங்கள் போன்ற குறைந்த காலத்திற்குள் அழித்தொழிக்கப்பட்டிருக்கவில்லை	மதில்பிறக்கப்பட்ட வாகனம் ஏதுமும் திணைக்களத்திடமில்லை. இருப்பினும் தொழில் நுட்ப கோளாறுகளுக்குள்ளான வாகனங்கள் உள்ளதுடன் அது தொடர்பில் தொழில்நுட்பக் குழு ஒன்றினை நியமித்து அதன் மூலம் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு வாகனங்களின் திருத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுள்ளது
ஒவ்வொரு வாகனத்தின் பொருட்டும் லொக் (Log) புத்தகங்கள் இற்றைப்படுத்தல் அடிப்படையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.	சகல வாகனங்களின் பொருட்டும் லொக் (Log) புத்தகங்கள் இற்றைப்படுத்தப்படும்.
நி.பி (94) இற்கமைய செலவு விடயத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த ஒதுக்கீடுகளிலிருந்து பயன்படுத்தியதன் பின்னர் நிலுவையாகவுள்ள ஒதுக்கீட்டு	வருடாந்த மதிப்பீட்டு நிதி ஒதுக்கீட்டு வரையறையினை மீறி பொறுப்புக்களுக்கு வருகின்றமை கடந்த பல வருடங்கள் பூராகவும் படிப்படியாக

வரையானது அங்கீகரிக்கப்பட்ட வரையறையினை மீறி பொறுப்புக்கள் உருவாக்கிக் கொண்டுள்ளது.	கட்டுப்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை முறைப்படுத்தியன் காரணமாக 2022ம் ஆண்டில் ஒதுக்கீட்டு வரையறையினை மீறிய பொறுப்புக்கள் அறிக்கையிடப்படாத நிலைக்கு அந்த நிலைமையினைக் கட்டுப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.
நி.பி (94) இற்கமைய செலவு விடயத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த ஒதுக்கீடுகளிலிருந்து பயன்படுத்தியதன் பின்னர் நிலுவையாகவுள்ள ஒதுக்கீட்டு வரையானது அங்கீகரிக்கப்பட்ட வரையறையினை மீறி பொறுப்புக்கள் உருவாக்கிக் கொண்டுள்ளது.	வருடாந்த மதிப்பீட்டு நிதி ஒதுக்கீட்டு வரையறையினை மீறி பொறுப்புக்களுக்கு வருகின்றமை கடந்த பல வருடங்கள் பூராகவும் படிப்படியாக கட்டுப்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை முறைப்படுத்தியன் காரணமாக 2022ம் ஆண்டில் ஒதுக்கீட்டு வரையறையினை மீறிய பொறுப்புக்கள் அறிக்கையிடப்படாத நிலைக்கு அந்த நிலைமையினைக் கட்டுப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.
ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து காணப்படுகின்ற கடன் நிலுவைகள் மீதி காணப்படுகின்றது.	நிலுவைக் கடன்கள் இருப்பதற்கான காரணங்களை இனங்கண்டு 2020ம் ஆண்டிலிருந்து ரூபா 4,766,765.82 இற்கான கடன் நிலுவையிலிருந்து 363,399.00 கடன் நிலுவை தீர்க்கப்படுட்டுள்ளது. அதன்பிரகாரம் 2021ம் ஆண்டிலிருந்து நிலுவையாகவிருந்த கடன் மீதியாக அறிக்கையிடப்படுகின்ற ரூபா 3,403,366.82 இற்குறிய திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
பொது வைப்புக்கணக்கில் காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி.571 இற்கமைநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை	பொது வைப்புக் கணக்கில் உள்ள இரு வருடங்களுக்கு மேற்பட்ட சகல மீதிகளும் நி.பி. 5471 இன் பிரகாரம் அரச வருமானத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் அன்றிருந்த சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டு திறைசேரியினால் பூர்த்திசெய்ய இணக்கப்பாட்டினை வழங்கியிருந்த கடன் தொகையில் திர்க்கப்படவேண்டிய நிலுவைகளை எட்டு வருட காலங்களாக உள்ள 2,374,500,000.00 இற்கானகான மீதியினை தீர்க்கும் பொருடடு தேவையான தொகை கிடைக்காததன் காரணமாக அது வைப்புக் கணக்குகள்

	நிலுவையொன்றாக காட்டப்படுகின்றது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவாள் தீர்க்கப்படவேண்டிய நிலுவை ஒன்றாகும் என்பதனால் வைப்புக் கணக்கில் உள்ள இந்த மீதி நி.பி. 571 இற்கமைய அரசாங்க வருமானத்தில் வரவிட வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறவில்லை
நி.பி 371 இற்கமைய வழங்கப்பட்ட பல்பணி இடைக்கால கட்டுநிதிப்பணிகள் பூர்த்தியாகி ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	பல்பணி இடைக்கால கட்டுநிதி பணிகள் முடிவடைந்தவுடனேயே தாமதங்கள் கணக்காய்வு காலவரையறைக்குள் இருந்ததுடன் தற்போது பல்பணி கட்டுநிதி 14 நாட்களுக்குள் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் இடைக்கால கட்டுநிதி 14 நாட்களுக்குள் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் இடைக்கால கட்டுநிதி வைப்பு தீர்ப்பதில் உள்ள தாமதங்களை தவிர்த்துக் கொள்ள வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளது.
2017.09.20 ம் திகதியிடப்பட்ட 2017ம் ஆண்டின் 04 இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் பணியாளர் குழாம் தகவல்களை ஒரு தவணை முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கட்டிருக்கவில்லை.	தவணை ரீதியாக அறிக்கையாகவின்றி வருட இறுதி, இறுதித் தவணை அறிக்கையினை இதற்கு முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2023ம் ஆண்டிலிருந்து பணியாளர் குழுவும் தகவல்களை தவணையடிப்படையில் அறிக்கைகளைத் தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
நிறுவனம் தொடர்பில் பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கும் பொருட்டு வலைத்தளம் உருவாக்கி பராமரித்துச் செல்லப்பட்டிருக்கவில்லை. வலைத்தளத்தின் மூலம் பொதுமக்களுக்க முறைப்பாடுகள், அல்லது பாராட்டுக் குறிப்புக்களை பதிவிடும் பொருட்டு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	www.samurdhi.gov.lk என்ற வலைத்தளத்தின் ஊடாக 2015ம் ஆண்டிலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோக பூர்வ வளைத்தளம் ஒன்றினை பராமரித்து வருகின்றது. இது நாளாந்தம் செயற்படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக மக்கள் தங்களது முறைப்பாடுகளையும் பாராட்டுக்களையும் வழங்குவதற்கான 011 2887722 என்ற இலக்கத்தின் கீழ் அவசர அழைப்புப் பிரிவு ஒன்றினை (Hot Line) அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த Hot Line சமுர்த்தி வங்கிகளில் சுவரொட்டிகளில் பகிரங்கப்படுத்தப்பட்டு மக்கள் விளக்கமளிக்கப்பட்டுள்ளனர்.

பிரஜைகள் / சேவைநாடிகள் கொள்கைப் பிரகடனம் முறையான பிரகாரம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை. நிறுவனத்தின் பிரஜைகள் / சேவைநாடிகள் கொள்கைப்பிரகடனம் செயற்படுத்துவது தொடர்பில் கணக்காணிப்பது மற்றும் மதிப்பிடு செய்யும் பொருட்டு நிறுவனத்தில் ஒரு முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரஜைகள் / சேவைநாடிகள் கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டு 2022.04.01ம் திகதி அமைச்சின் மேலதிக செயலாளருக்கு (ஆராய்ச்சி மற்றும் புள்ளி விபரம்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரஜைகள் / சேவை நாடிகள் கொள்கைப் பிரகடனம் அமுல்படுத்தப்படுவது தொடர்பில் கண்காணிப்பு மற்றும் 4மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பிலான அறிக்கையினை அரசாங்க சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் மேலதிக செயலாளருக்கு (மனித வளங்கள் அபிவிருத்தி) மின்னஞ்சல் மூலம் 2022.03.21ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
பொது நிர்வாக ஒழுங்குகளுக்கமைய முறையான பிரகாரம் தயாரிக்கப்பட்ட மனித வளங்கள் திட்டமிடல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட மனித வளங்கள் திட்டமிடல் ஊடாக ஓர் ஊழியரின் பொருட்டு ஆகக் குறைந்தது 12 மணித்தியால பயிற்சி ஒன்றாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தில் 2500 உள்ளகப் பணியாளர் மட்டளவில் உள்ளதுடன் திறைசேரியிலிருந்து உத்தியோகத்ர்களுக்கு ஆற்றல் விருத்தியின் பொருட்டு கிடைக்கப்பெறுகின்ற வரையறுக்கப்பட்ட மனிதவளங்கள் அபிவிருத்தித் திட்டமிடலுக்கு ஏற்ப அத்தியாவசிய பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்கள் ஈடுபடச் செய்யப்படுகின்றனர். மொத்தப் பணியாளர்களுக்கும் வருடம் ஒன்றுக்கு பயிற்சியினை வழங்கும பொருட்டு போதுமான நிதியொதுக்கீடுகள் தேவைப்பாடுகளை, வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து முன்னுரிமைப்படுத்தப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.
மொத்தப் பணியாளர்களும் உள்ளடங்களாக வினைத்திறன் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வாளர் தலைமையதிபதியால் பந்திகளாக சுட்டிக் காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் / பிழைதிருத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அதிகார சுவையொன்றாக இருந்த நிறுவனம் திணைக்களம் ஒன்றாக ஆக்கப்பட்டவுடன் உத்தியோகத்தர்கள் முகங்கொடுத்திருந்த பிரச்சினைகள் தொடர்பில் முக்கியத்துவம் வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது. ஆகையினால் அவதானிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பில் செயற்பட தாமதம் ஏற்பட்டிருத்தலும் தற்போது அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு

	வருகின்றது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 இற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்